# மனதின் நிலைகள்



எழுதியவர் :

பிரம்மவித்வரிஷ்டா

தட்டவர்த்தி ராஜ்யலட்சுமி

# மனதின் நிலைகள்



**எழுதியவர் :**
**பிரம்மவித்வரிஷ்டா தட்டவர்த்தி ராஜ்யலட்சுமி**
**மொழிப் பெயர்ப்பு : ப. ஸ்வப்னா**
**திருத்தம் : பொ. சுப்பிரமணியம்**

விலை : **Rs. 60/-**

**புத்தகங்களைப் பெற**
**தட்டவர்த்தி வீரராகவராவு**
தட்டவர்த்திவாரி வீதி, பீமவராம் - 1
வெஸ்ட் கோதாவரி, ஆந்திரபிரதேஷ்
செல் : 9490171853, 9440309812

## To watch Tatavarthy's zoom sessions:

a) Silence meditation from **4 am** to **6.30 am** followed by messages related to soul-knowledge from **6.30 am** to **7.30 am**

Zoom ID: **2413823868** Password: **RAO**

b) The above-mentioned Zoom session will also be livestreamed on **YouTube** from **6.30am to 7.30am.**

c) Those who are in the TVR & TRL WhatsApp group will receive Zoom and YouTube links, along with details about the Tatavarthy's classes. They must save Sindhura's phone number: **8555995217**

d) Those who wish to join the Tatavarthy's WhatsApp group can contact Sindhura: 8555995217, Madhu: 7893917364 or visit www.tst.org.in and click on the "Join WhatsApp Group" link.

## Programs by the Tatavarthy's that will be broadcasted on YouTube:

a) Channel name: **Tatavarthy Veera Raghava Rao**

This channel has 2,000+ videos featuring messages from Mr and Mrs Tatavarthy.

b) PMC has also launched a YouTube channel for Brahmarshi Tatavarthy Veera Raghava Rao.

Channel name: **Brahmarshi Tatavarthy Veera Raghava Rao.**

c) For messages from trainees who have trained under Mr. and Mrs. Tatavarthy, watch the Tatavarthy Spiritual Trainees YouTube channel.

d) You can also go directly to the YouTube app, type Tatavarthy Veera Raghava Rao in the search bar, and watch all the Mr. and Mrs.Tatavarthy videos.

# மனதின் நிலைகள்

மனிதர்கள் ஒவ்வொரு நாளும் பல விஷயங்களைத் தெரிந்து கொள்கிறார்கள். அப்படித் தெரிந்து கொண்டவர்களில் சிலர் எதையும் செய்யாமல் அப்படியே இருந்துவிடுகிறார்கள், சிலர் கேட்ட விஷயங்களை மறந்து விடுகிறார்கள், இன்னும் சிலர் அந்த விஷயங்களின் மூலம் பலவற்றைக் கற்றுக்கொண்டு வாழ்க்கையில் முன்னேற்றம் அடைகிறார்கள்.

மனிதர்களிடையே ஏன் இத்தகைய வேறுபாடுகள் இருக்கின்றன என்று கவனித்தால், அவர்களுடைய மனதின் நிலைகளைப் பொறுத்தே அவர்களின் நடத்தை மற்றும் அவர்கள் பெறும் ஞானம் அமைகிறது என்பது நமக்குத் தெரியவரும்.

இந்தச் சிருஷ்டியில் 84 லட்சம் வகையான உயிரினங்களாகப் பிறவி எடுத்து, இறுதியாகவே மனிதப் பிறவி கிடைக்கிறது. அப்படி மனிதப் பிறவி எடுத்தவன், தனது வாழ்க்கையின் இலட்சியம் என்ன? தனது இலக்கு என்ன? என்பதைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

ஆனால், இந்தக் கலியுகத்தில் பலர் சந்தோஷங்களை அனுபவிப்பதற்கே என்பது போல் வாழ்கிறார்கள். ஆனால், பத்ரிஜி போன்ற குருமார்கள் உங்கள் வாழ்க்கையில் வருவதால் உங்கள் இலக்கு என்ன? உங்கள் இலட்சியம் என்ன? சத்யம் என்றால் என்ன? தர்மத்தை எவ்வாறு கடைப்பிடிப்பது? ஞானத்தை எவ்வாறு பெறுவது? மோட்சத்தை அடைவதற்கான வழி என்ன? போன்றவற்றை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். வாழ்க்கையின் இலட்சியத்தையும் இலக்கையும் கூட நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

மனிதனின் முன்னேற்றம் அவனது மனதைப் பொறுத்தே அமைகிறது. மனம் உலகத்தை நோக்கித் திரும்பினால் முன்னேற்றம் மந்தமாக இருக்கும். மனம் ஆன்மாவை நோக்கித் திரும்பினால் முன்னேற்றம் மிக அதிகமாக இருக்கும்.

எனவே, மனதைப் பற்றித் தெரிந்து கொள்வோம். மனித மனம் 'பஞ்சாவஸ்தைகளில்' (ஐந்து நிலைகளில்) இருக்கும். அவை:

1) ஸ்மிருதி (நினைவாற்றல்), 2) மதி(எண்ணம்/சிந்தனை),
3) புத்தி(பகுத்தறிவு), 4) பிரக்ஞை (பேரறிவு/விழிப்புணர்வு),
5) பிரதிபா (தனித்திறமை)

மனித மனம் இந்த ஐந்து நிலைகளில் செயல்படுகிறது.

**1) ஸ்மிருதி (நினைவாற்றல்):**

நீங்கள் தெரிந்து கொள்ளும் ஒவ்வொரு விஷயத்தையும் நினைவில் வைத்திருப்பதே ஸ்மிருதி எனப்படும். விஷயங்களைச் சேகரிப்பதும் மனமே, அவற்றை நினைவில் வைத்திருப்பதும் மனமே, அந்த நினைவாற்றல் நிலையையே ஸ்மிருதி என்கிறோம்.

நீங்கள் கவனித்தால், சிறுவயதில் நடந்த நிகழ்வுகள், கற்றுக்கொண்ட விஷயங்கள், மனப்பாடம் செய்த செய்யுள்கள் மற்றும் வாய்ப்பாடுகள் ஆகியவை நன்றாக நினைவிருக்கும். ஏனென்றால், அப்போது உங்கள் மனம் வெளி உலக விஷயங்களில் ஈடுபடவில்லை, யாரைப் பற்றியும் கவலைப்படாததால், மனதிற்கு அதிகமாக கவனம் இருந்தது. நினைவிலிருந்தே விழிப்புணர்வும் தெளிவும் பிறக்கிறது.

வெளி உலக விஷயங்களை பற்றிய கவலை இல்லாமல் ஆன்மீகப் புத்தகங்களைப் படித்தாலும், கேட்டாலும் அல்லது குருமார்கள் மூலம் ஆன்மீக விஷயங்களைத் தெரிந்து கொண்டாலும், அவை உங்கள்

நினைவில் ஆழமாகப் பதிந்துவிடும். ஆனால், உங்களைச் சுற்றிப் பலர் இருக்கும்போது நீங்கள் புத்தகம் படித்தால், உங்கள் கவனம் அருகில் இருப்பவர் மீதே இருக்குமே தவிர, படிக்கும் விஷயத்தின் மீது இருக்காது. அதனால்தான் அவை உங்கள் நினைவில் இருக்காது, மேலும் நீங்கள் அவற்றை அவ்வளவாக நினைவில் வைத்திருக்கமாட்டீர்கள்.

அதாவது, நீங்கள் முழு கவனத்தோடு படித்த விஷயங்கள் மட்டுமே உங்கள் நினைவில் இருக்கும். அதனால்தான் குருமார்கள் சொல்லும் விஷயங்களை முழு கவனத்துடன் கேட்க வேண்டும். அப்போதுதான், அவை சிதைவின்றி உங்களுக்குள் சென்று உங்கள் நினைவில் நிலைத்து நிற்கும்.

**2) மதி (எண்ணம்/சிந்தனை):**

'மதி' என்பது எதிர்காலத்தில் நடக்கப்போகும் விஷயங்களைப் பற்றி ஊகிப்பதும், நடக்கப்போகும் விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பதாகும்.

யாராவது நடக்கப்போகும் விஷயங்களைப் பற்றியோ அல்லது நடந்த விஷயங்களைப் பற்றியோ பேசும்போது, அவர்களது பேச்சில் பல தவறுகள் நிகழும். யாராவது ஒரு தலைப்பைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, நீங்கள் அவர்களிடம் வேறொரு தலைப்பைப் பற்றிப் பேசினால், நீங்கள் அவர்கள் பேச்சில் கவனம் செலுத்தவில்லை என்று அர்த்தம். அப்போது அவர்கள், உனக்கு அறிவு இல்லையா? நான் என்ன சொன்னேன்? நீ என்ன பேசிக்கொண்டிருக்கிறாய்? என்று கேட்பார்கள். அதாவது, அப்போது உங்கள் மதி(மனம்) நிகழ்காலத்தில் இல்லை என்று அர்த்தம்.

அதேபோல், எப்போதோ நடந்த விஷயங்களை நினைத்து வருத்தப்படுவதும், நடக்கப்போகும் விஷயங்களை

நினைத்து பயப்படுவதும் போன்ற மனநிலையில் நீங்கள் இருப்பீர்கள்.

இந்த ஆன்மீகப் பாதைக்கு வந்த நீங்கள் நிகழ்காலத்திலேயே வாழ வேண்டும். நிகழ்காலத்தில் நீங்கள் சரியாக இருந்தால், உங்கள் எதிர்காலம் எப்போதும் சிறப்பாக இருக்கும் என்று சத்குருக்கள் கூறுகிறார்கள்.

அதனால் தான் கடந்த காலத்தைப் பற்றி யோசிக்காதீர்கள், எதிர்காலத்தைப் பற்றிய கற்பனைகளை ஒருபோதும் செய்யாதீர்கள். நிகழ்காலத்தில் வாழக்கூடிய மனநிலையை வளர்த்துக்கொள்ளுங்கள். அப்போது உங்கள் மதி சரியாக இருக்கும், நீங்கள் நிகழ்காலத்திலேயே வாழ்வீர்கள்.அப்படி நிகழ்காலத்தில்

வாழ வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? பத்ரிஜி அவர்கள் போதித்த "மூச்சின் மீது கவனம்" தியானத்தைத் தீவிரமாக பயிற்சி செய்ய வேண்டும்.

**3) புத்தி (பகுத்தறிவு):**

உங்கள் வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் கவனமாக யோசித்து முடிவெடுப்பது புத்தி. நிகழ்காலத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்திலும் சரியான முடிவை எடுப்பதும் புத்தி.

அவசரப்படுபவர்களுக்கும், அகங்காரம் கொண்டவர்களுக்கும், அஞ்ஞானத்தில் இருப்பவர்களுக்கும் புத்தி சரியாக வேலை செய்யாது. கொஞ்சம் நிதானமாக யோசித்தால், ஓரளவு ஞானம் இருக்கும் போதே பூர்வ ஜென்ம வாசனை (முந்தைய பிறவியின் பதிவுகள்), கர்மாக்களும், நற்பண்புகளும் (சம்ஸ்காரங்கள்) மேலோங்கி இருக்கும்போது, உங்கள் புத்தி சரியான முடிவுகளை எடுக்கும். அதுமட்டுமல்லாமல், புத்தி சிறப்பாகச் செயல்படும்போது நீங்கள் உலக நன்மைக்கான காரியங்களைச் செய்வீர்கள்.

அதேபோல், விலங்குகள் மற்றும் பறவைகளுக்கும் புத்தி இருக்கிறது, ஆனால் அவை புத்தியை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. அவை உணவு தேடுவதற்கும் அல்லது ஏதேனும் ஆபத்து ஏற்படும் போது மட்டுமே புத்தியைப் பயன்படுத்துகின்றன. அவை புத்தியின் மிகச் சிறிய நிலையிலேயே இருப்பதால், இந்த இரண்டு விஷயங்களுக்காக மட்டுமே புத்தியைப் பயன்படுத்துகின்றன.

ஆனால், மனிதன் முழுமையான புத்தியைப் பெற்றிருந்தாலும், அதை முழுமையாகப் பயன்படுத்துவதில்லை. அதற்குக் காரணம் அவன் உட்கொள்ளும் உணவும், அவனது பழக்கவழக்கங்களுமே ஆகும். அதனால்தான், யாராவது தவறான செயல்களைச் செய்யும் போது அல்லது தவறான முடிவுகளை எடுக்கும்போது, "உனக்கு புத்தி இல்லையா?" என்று திட்டுகிறார்கள்.

நீங்கள் கவனித்தால் தெரியும், சிலர் எதிரில் இருப்பவர் எப்படிப்பட்டவர் என்று தெரிந்துகொள்ளாமலேயே அவசரப்பட்டு பழி சுமத்துவார்கள். அதன் பிறகு அவரைப் பற்றித் தெரிந்துகொண்டு, எனது புத்தி மழுங்கி அப்படி நடந்து கொண்டேன், என்னை மன்னித்துவிடு என்று கூறுவார்கள்.

உங்கள் கர்மாக்கள் நல்லதாக இருக்கும்போது, நீங்கள் உலக நன்மைக்கான செயல்களைச் செய்வீர்கள், அடுத்தவர் மீது பழி சுமத்த மாட்டீர்கள். அப்போது உங்கள் புத்தி சரியான முறையில் செயல்படுகிறது என்று அர்த்தம்.

அப்படிப்பட்டவர்கள், எப்போதும் மற்றவர்கள் தங்களுக்கு உதவி செய்வார்கள் என்று சிந்திக்க மாட்டார்கள். அவர்களின் புத்தி எப்போதும் மற்றவர்களுக்கு எப்படி நல்லது செய்ய வேண்டும் என்றே நினைக்கும். அத்தகையவர்கள் செய்யும் செயல்களுக்கு ஏற்ப இயற்கையும் ஒத்துழைக்கும்.

நீங்கள் நற்செயல்களைச் செய்யும்போது உங்கள் புத்தி 'சத்புத்தி' (நல்ல புத்தி) ஆகிறது. மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் அல்லது கஷ்டப்படுத்தும் செயல்களைச் செய்யும்போது உங்கள் புத்தி 'துர்ப்புத்தி' (கெட்ட புத்தி) ஆகும். ஏனென்றால்

பிறரைத் துன்புறுத்துபவர்கள் அரக்கர்கள், பிறருக்கு நன்மை செய்பவர்கள் தேவர்கள். "தேவர்களின் புத்தி நற்புத்தி (சத்புத்தி), அரக்கர்களின் புத்தி தீயபுத்தி (துர்ப்புத்தி). இருவருக்குமே புத்தி இருக்கிறது, ஆனால் அதைப் பயன்படுத்தும் விதத்தைப் பொறுத்தே அது நற்புத்தியா அல்லது தீயபுத்தியா என்பது தெரியவரும்.

**4) பிரக்ஞை (பேரறிவு/விழிப்புணர்வு):**

உங்கள் வாழ்க்கையில் ஒரு சத்குரு வந்து, அந்த இறைவன் யார்? அவரை எப்படி அறிந்துகொள்வது? போன்ற விஷயங்களைப் போதிக்கும்போது, வெளி உலகை நோக்கித் திரிந்த உங்கள் மனம் உள்நோக்கித் திரும்புகிறது.

உங்கள் மனம் எப்போதும் வெளி உலக விஷயங்களைச் சேகரிப்பதிலேயே கவனம் இருக்கும். இப்படி வெளி உலக விஷயங்களைச் சேகரிப்பதால் அதிகப்படியான கவலைகள், ஆவேசம், அமைதியின்மை, அகங்காரம் மற்றும் அறியாமை உண்டாகிறது. ஆனால், உள்நோக்கித் திரும்பிய மனமானது அமைதியாகவும், நிதானமாகவும், நிலைத்தன்மையுடனும் சிந்திக்கும்.

அதனால்தான் இன்று மருத்துவர்கள் கூட மன அழுத்தம் (Tension) மற்றும் மனச்சோர்வினால் (Depression) இருப்பவர்களைத் தியானம் செய்யச் சொல்கிறார்கள். எத்தனை மருந்துகளை உட்கொண்டாலும் மனிதனுக்கு அமைதி கிடைக்காது , தியானம் செய்தால் மட்டுமே மனதிற்கு அமைதி கிடைக்கும். அந்தப்

படைத்தவனுக்கு(சிருஷ்டிகர்த்தா) தியானத்தை எப்போது வழங்க வேண்டும் என்பது தெரியும். அதனால்தான், எப்போதோ துவாபர யுகத்தில் முழுமையாக மறைந்துபோன தியானத்தை, இப்போது மீண்டும் கலியுகத்தில் பத்ரிஜி அவர்கள் வருகைக்கு பிறகு மனிதர்களால் மீண்டும் பயிற்சி செய்யப்படுகிறது. பத்ரிஜி அவர்களின் மூலமாகத் தியானத்தின் சிறப்பையும், அதன் அவசியத்தையும் அறிந்துகொண்டு, தியானம் செய்வதன் மூலம் மனதிலுள்ள கவலைகள், ஆவேசங்கள் மற்றும் அகங்காரங்களை மக்கள் குறைத்து கொள்கிறார்கள்.

வெளிப்புறமாகப் பார்த்தால் அகங்காரம் வரும், உள்நோக்கிச் செல்லும்போது ஆனந்தம் கிடைக்கும். பாருங்கள், இந்த வெளி உலகில் நீங்கள் எந்த ஒரு சிறிய அல்லது பெரிய காரியத்தைச் செய்தாலும், சிறந்த கல்வியைப் பெற்றிருந்தாலும், அழகாக இருந்தாலும், செல்வம் அல்லது பதவிகள் இருந்தாலும் அகங்காரம் அதிகரிக்கிறது. ஆனால், பரமாத்மா படைத்த இந்தப் படைப்பைப் பார்த்து இது என்னுடையது என்ற பொய் ஞானத்தால் மனிதர்கள் அகந்தையை வளர்த்துக் கொள்கிறார்கள்.

இந்தச் சிருஷ்டியில் உள்ள எதுவுமே என்னுடையது அல்ல, அனைத்தும் அந்த இறைவனுக்கே சொந்தம் என்று உணரும் தருணத்திலிருந்து, நீங்கள் உங்களுக்குள்ளே பயணித்து, உங்கள் இலக்கு என்ன? உங்கள் நோக்கம் என்ன? இந்தப் பூமியில் நீங்கள் சாதிக்க வேண்டியது என்ன? என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

அதுமட்டுமல்லாமல், ஒரு சத்குருவை அடையும்போது, அவருடைய வார்த்தைகளை அந்தப் பரமாத்மாவின் வாக்குகளாக ஏற்றுக் கொண்டு, அவர்

காட்டிய வழியில் தியானம் செய்யும்போது, உங்களுக்குள் இருக்கும் பிரக்ஞை (பேரறிவு) வெளிப்படும்.

இந்த ஆன்மீக வாழ்க்கையில் பிரவேசித்தது முதல், உங்கள் ஆன்மாவிலிருந்து சமிக்ஞைகள் (உள் அறிகுறிகள்) கிடைத்துக்கொண்டே இருக்கும். அதனால்தான், உங்கள் வாழ்க்கையில் குரு வரவில்லை என்றால், சத்தியம் உங்களுக்குப் புரியாது. சத்தியம் தெரியாவிட்டால் தர்மத்தைக் கடைப்பிடிக்க முடியாது. சத்தியமும் தர்மமும் இல்லையென்றால் ஞானம் பெருகாது. இந்த மூன்றும் உங்கள் வாழ்க்கையில் இணையும்போது, உங்கள் ஆன்மாவிலிருந்து பிரக்ஞை மனதை அடைகிறது.

அதனால்தான், இந்த தியான மார்கத்திற்கு வந்தவர்கள் ஒரு விதமாகவும், இந்த உலகில் உள்ள மற்றவர்கள் வேறு விதமாகவும் சிந்திக்கிறார்கள். பதவிகளை அடைந்தாலும், பட்டங்களைப் பெற்றாலும், பணம் வந்தாலும், அனைத்தும் எனது உழைப்பால் வந்தவை என்றே அவர்கள் நினைக்கிறார்கள்.

ஆனால், ஒரு ஞானியோ அனைத்தும் இறைவனால் வந்தவை என்று நினைக்கிறான். அதாவது, அந்த இறைவனின் கருணையினாலும், தயவினாலுமே நான் அனைத்தையும் பெறுகிறேன் என்றும், எனக்குப் பின்னால் அந்தப் பரமாத்மாவின் அருள் இருக்கிறது என்று அவர் எண்ணுவார். நீங்கள் இயற்கைக்கும், குருவிற்கும், பரமாத்மாவுக்கும் மதிப்பளிக்கும்போது, உங்கள் ஆன்மாவிலிருந்து பிரக்ஞை உங்களுக்குக் கிடைக்கும். அப்போது மனம் மிகுந்த ஞானத்தால் நிரப்பப்படும். பிரக்ஞையிலிருந்து உங்களுக்கு ஞானம் கிடைக்கிறது என்று பொருள். ஆனால் வெறும் கேட்டல் மற்றும் சுயமான கற்றல் (சுவாத்தியாயம்) மூலம் கிடைப்பது மிகக்

குறைந்த அளவிலான ஞானமே. ஆனால் முழுமையான ஞானம் என்பது பிரக்ஞையிலிருந்து மட்டுமே பெற முடியும்.

**5) பிரதிபா (தனித்திறமை):**

பிரதிபா என்பது பிரக்ஞையை விட உயர்ந்தது. யார் ஒருவர் தீவிரமான தியானப் பயிற்சியை செய்கிறாரோ, அவர் மீது இறைவனின் கருணை உண்டாகி, அந்த தெய்வ அருளினால் அவர்களின் பிரதிபா வெளியே வறுகிறது.

நீங்கள் கவனித்தால், பெரும் மகானான ரத்னாகர் என்பவர் வால்மீகியாக மாறி ராமாயணம் எனும் மகா காவியத்தையே எழுதினார். அதேபோல் காளிதாசர், வியாசர், சங்கராச்சாரியர், மலையாள சுவாமிகள் போன்றோர் அனைவரும் தீவிரமாக தியான சாதனை செய்து, இறை அருளால் தங்களுக்குள் இருந்த பிரதிபாவை வெளிப்படுத்தினார்கள். அவர்கள் எண்ணற்ற நூல்கள், மற்றும் சாஸ்திரங்களை நமக்கு வழங்கியிருக்கிறார்கள் என்றால், அவர்களிடம் எவ்வளவு பிரதிபா இருந்திருக்க வேண்டும்? அவர்களுக்கு எவ்வளவு புத்திசாலித்தனம் இருக்க வேண்டும்? சிந்தித்துப் பாருங்கள். இதன் மூலம் அவர்களின் மனம் எவ்வளவு தூய்மை அடைந்திருக்கும் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

பரமாத்மாவின் அருள் இருப்பவர்களுக்கு மட்டுமே இந்த பிரதிபா வெளிப்படும். ராகவராவ் அவர்களால் பல புத்தகங்களை எழுத முடிந்தது என்றால், ஆரம்பத்தில் அவரிடம் இருந்த பிரக்ஞை மற்றும் பத்ரிஜி அவர்களின் அறிமுகத்திற்குப் பிறகு தியானப் பயிற்சி அதிகரிக்க அதிகரிக்க, உலக நன்மைக்கான காரியங்களைச் செய்து கொண்டே, இன்னும் என்ன செய்ய வேண்டும்? இந்த ஞானத்தை அனைவரிடமும் எப்படி வளர்க்க வேண்டும்?

என்று நிரந்தர ஏக்கத்தில் இருந்தார். அனைவருக்குள்ளும் ஆன்மா எனும் இறைவன் இருக்கிறான், அந்த ஆன்மா எனும் இறைவனுக்கு தியானம் எனும் நீரை ஊற்றினால், அந்த சக்தி வளர்ந்து, பிரக்ஞை என்பது பிரதிபாவாக மாறும் என்பதை உணர்ந்து, அவர் அனைவருக்கும் போதித்து வருகிறார். ராகவராவ் அவர்களிடம் எப்பொழுது அந்த பிரக்ஞை பிரதிபாவாக மாறியதோ, அப்பொழுதிலிருந்து அவர் பல புத்தகங்களை எழுத முடிந்தது.

உதாரணமாக, தற்காலக் கலைஞர்களை எடுத்துக் கொண்டால் நடனம், ஓவியம், இசை போன்ற பல்வேறு துறைகளில் பலவிதமான கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் கடந்த பிறவிகளில் ஏதோ ஒரு வகையில் அந்தக் கலையைப் பயின்று சாதனை செய்தவர்களே. அதனால்தான் அவர்கள் இந்தப் பிறவியிலும் கூட முயற்சி செய்து, தங்களுக்குள் இருக்கும் பிரதிபாவை (தனித்திறமையை)வெளிப்படுத்த முடிகிறது.

ஆனால் அவர்கள் அதோடு நின்றுவிடாமல், இன்னும் இந்த தியான சாதனையைச் செய்தால், ஒரு காளிதாசரைப் போல, வால்மீகியைப் போல, வியாச பகவானைப் போல, சங்கராச்சாரியாரைப் போல மிகச் சிறந்த பல காவியங்களை எழுதி, அந்த ஞானத்தை மக்களுக்கு வழங்க முடியும்.

அவர்கள் ஒரு சிறிய அளவிலான திறமையை வெளிப்படுத்துகிறார்கள் என்றால், ஏதோ ஒரு கலையில் மட்டுமே சிறந்து விளங்குகிறார்கள் என்று அர்த்தம். ஆனால் ஒரு சங்கராச்சாரியார், காளிதாசர் அல்லது வால்மீகி போன்றவர்கள் உலக நலனுக்காகச் சேவை

செய்து, பல மகா காவியங்களின் மூலம் மிகுந்த ஞானத்தை மக்களுக்கு வழங்கினார்கள். அதைப்படித்து எத்தனையோ பேர் ஞானிகளாக மாறியுள்ளனர்.

மேலும் அவர்கள் அனைவர் மீதும் தெய்வத்தின் அருள் இருந்ததால்தான் அவர்களுடைய பிரதிபா அந்த அளவிற்கு விரிவடைந்துள்ளது. இந்தப் பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களையும் விட மனிதன் உயர்ந்தவன், மனதின் ஆற்றலோடு வாழ்பவன். ஆனால், அந்த மனதை உலக விஷயங்களின் பக்கம் திருப்பி, சுயநலத்துடன் வாழ்ந்து, அந்தச் சுயநலத்திலேயே இருந்து, ஒரு குறிப்பிட்ட அளவு மட்டுமே கற்றுக்கொண்டு இறந்து போவார்கள். ஆனால், அதே மனதை சாதனையின் மூலம் ஆன்மாவின் பக்கம் திருப்பினால், புத்தியை மலரச் செய்து, அறிவைப் பெற்று, ஞானிகளாக மாறுவார்கள்.

நீங்கள் உலக வாழ்க்கையை மட்டும் வாழ்ந்து, ஆன்மீக வாழ்க்கை இல்லாமல் இருந்தால், அது பாதி வாழ்க்கையை மட்டுமே வாழ்ந்ததற்குச் சமம், முழுமையான மனிதர்களாக முடியாது.

பலர் இந்தப் பூமியில் பிறந்து, வளர்ந்து, அனுபவித்து, பிறகு இறந்து போகிறார்கள். ஆனால் அவர்கள் யாரும் முழுமையான மனிதர்களாக மாற முடியாது. ஆனால் யாரொருவர் இந்த உலகிற்கு வந்து, உலக வாழ்க்கையை அனுபவிப்பதோடு சேர்த்து, ஆன்மீக வாழ்க்கையையும் அனுபவிக்கிறார்களோ, அவர்களே முழுமையான மனிதர்கள் ஆவார்கள்.

பத்ரிஜி அவர்கள் பலருக்கு ஞானத்தைப் போதித்துள்ளார், ஆனால் அவர்கள் அனைவருக்குள்ளும் இருக்கும் திறமை வெளிப்பட்டதென்றால், அது அவரவர் முயற்சியைப் பொறுத்தே இருக்கும். நான் முன்னேற

வேண்டும் என்ற ஆசை அவர்களுக்குள் இருக்க வேண்டும். நான் மட்டுமல்ல, தன்னை சுற்றியுள்ள அனைவரும் ஆன்ம சொரூபங்களே, அதனால் அனைவரையும் என்னால் முடிந்தவரை முன்னேற்ற வேண்டும் என்று எந்த ஒரு நபர் மனப்பூர்வமாக விரும்புகிறாரோ, அவருக்கு இயற்கையின் ஒத்துழைப்பு இருக்கும்.

நானே நலமாக இல்லை என்றால், நான் எப்படி அடுத்தவர்களை நலமாக்க முடியும்? என்று பலர் நினைப்பார்கள். நீங்கள் நலமாக இருக்கிறீர்களா இல்லையா? என்று இல்லை அடுத்தவர் நன்றாக இருக்கும்போது நீங்கள் இன்னும் சிறப்பாக இருப்பீர்கள். சிருஷ்டியில் உள்ள இறைவனின் தர்மமே, உனக்குக் கிடைத்ததைக் கொடுப்பதுதான்.

அதனால்தான் பத்ரிஜி அவர்கள், "நீ எவ்வளவு ஞானத்தைக் கற்றுக்கொண்டாயோ, அவ்வளவு பிறருக்கு சொல்லிக் கொடு" என்றார். அதற்கு மேல் கூடுதலாகச் சொல்லச் சொல்லவில்லை. நீ கற்றுக்கொண்டது என்னவோ, அது அனைவரும் சொல்லிக் கொடு. அனைவரும் ஆன்ம சொரூபங்களே என்று உணர்ந்து அதையே கற்பி என்றார். அனைத்து ஜீவராசிகளும் ஆன்ம சொரூபங்களே, அதனால்தான் எந்த ஒரு உயிரையும் கொல்லும் உரிமை உனக்கு இல்லை என்றார்.

இந்த பரம சத்தியத்தைச் சொல்வதற்கு பட்டப்படிப்புகள் (Degrees) தேவையில்லை, நிகழ்காலத்தில் நடப்பதை மட்டும் சொல்லுங்கள், ஏனென்றால், அறியாமையில் உள்ள மனிதன் ஜீவஹிம்சை (உயிர்க்கொலை) செய்கிறான். அந்த உயிரினங்கள் எல்லாம் தனக்காகவே பிறந்தன என்று அவன் நினைக்கிறான். ஆனால் எந்த ஒரு உயிரும்

யாருக்காகவும் பிறப்பதில்லை. ஒவ்வொரு உயிரினமும் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள 84 லட்சம் ஜீவராசிகளாகப் பிறப்பெடுத்து, அனுபவங்களைக் கற்றுகொண்டு, பாடங்களைக் கற்றுக் கொண்டு, மனிதப் பிறவி எடுத்த பிறகு தான் யார்? தான் எங்கிருந்து வந்தோம்? எங்கே செல்ல வேண்டும்? அங்கு செல்வதற்கு இந்தப் பூமியில் என்ன செய்ய வேண்டும்? என்ற பாடங்களை குருவின் மூலம் கற்றுக்கொண்டு, அந்த வழியில் பயணம் செய்யும்போது, இந்த ஆன்மாவிற்கு முக்தி, மோட்சம் கிடைக்கும். அதாவது, இனி பிறவி எடுக்க வேண்டிய அவசியமில்லை என்பதை உணர்ந்து அதையே போதிக்க வேண்டும்.

இந்த சத்தியத்தைப் போதிப்பதற்காகவே இறைவன் உங்கள் உடலை தேர்ந்தெடுத்துள்ளார் என்று சந்தோஷத்துடன் நீங்கள் இந்தப் பணியைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்போது பரமாத்மாவே உங்களுக்குத் தேவையான அளவு சக்தியைக் கொடுப்பார். நீங்கள் தொடர்ந்து தியானப் பயிற்சி செய்யாமல் மற்றவர்களுக்குச் சொல்லும் உரிமை உங்களுக்கு இல்லை என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். தான் கடைப்பிடிக்காமல் பிறருக்கு போதிப்பவர் ஆச்சாரியர் அல்ல. எதையும் கடைப்பிடித்துக் காட்டுபவரே ஆச்சாரியர். எனவே, நீங்கள் குருவிடமிருந்து கற்றுக்கொண்டு, அதைப் பயிற்சி செய்து, அதன்படி வாழ்ந்து, அதைப் பத்து பேருக்காவது கற்பிக்க வேண்டும்.

அவ்வாறு நீங்கள் மேற்கொள்ளும் பயணத்தில் எந்தத் தடைகளும் இல்லாமல் அந்தப் பரமாத்மா உங்களை நிரந்தரமாகக் கவனித்துக் கொண்டிருப்பார். அதனால்தான் உங்களுக்குள் இருக்கும் பிரதிபாவை (திறமையை) உணர்ந்து, அதை வெளியே கொண்டு வரும்

மார்க்கமே தியானம். ஒவ்வொருவருக்குள்ளும் எல்லையற்ற சக்தி உள்ளது, அதனை வெளிப்படுத்தும் மார்க்கமே "மூச்சின் மீது கவனம்" தியானம். இதைத் தவிர வேறு வழி எதுவுமில்லை.

உங்கள் மனம் வெளிப்புற விஷயங்களில் சுழலும்போது அது குறுகிய தன்மையுடன் இருக்கும், அதுவே உள்நோக்கி செல்லும்போது விசாலமான தன்மையைப் பெறும். அதாவது, அனைவருக்கும் உதவ வேண்டும், அனைவரையும் ஞானிகளாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்ட மனமே மிகவும் உயர்ந்த மனம். அத்தகைய மனப்பக்குவத்தை வளர்த்துக் கொண்டு, “அனைவரும் நலமாக இருக்க வேண்டும்” என்ற விருப்பம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்.

அதனால்தான் நமது மனம் இந்தப் பஞ்சாவஸ்தை நிலையில் (ஐந்து நிலைகலள்) இருக்கும்போது, முதலில் நமக்காகவே நாம் வாழ்கிறோம் என்று நினைப்போம், ஆனால் இறுதியில் அனைவருக்காகவும் இந்த உடலை எடுத்திருக்கிறோம் என்பது நமக்கு புரியும். அவ்வாறு புரிந்து கொள்ளும் போது தான் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வதற்கான வாய்ப்பு உண்டாகும்.

# ஆன்மீகத்திற்கு வந்தவர்களின் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும்?

ஒவ்வொரு மனிதனுக்கும் உலக வாழ்க்கையும், ஆன்மீக வாழ்க்கையும் என இரண்டும் உள்ளன. ஆனால் சில மனிதர்கள் உலக வாழ்க்கை மட்டுமே நிரந்தரம் என்று நினைக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் எப்போதும் கவலையில் மூழ்கி தங்களின் வாழ்க்கையை வீணாக்கிக் கொள்கிறார்கள். இன்பங்கள், பணம் மற்றும் பதவிகளின் பின்னால் அலைந்து, வாழ்க்கை முழுவதையும் கவலையிலேயே கழிக்கிறார்கள். அவ்வாறே வாழ்க்கையை முடித்துக்கொண்டு, எதையும் சாதிக்காமல் சென்று விடுகிறார்கள்.

ஆனால், அந்த உலக வாழ்க்கையிலிருந்து ஆன்மீக வாழ்க்கைக்கு வர வேண்டுமென்றால், அவர்கள் எவ்வளவோ புண்ணியங்களையும், நற்செயல்களையும் செய்திருக்க வேண்டும், இல்லையெனில் ஆன்மீக வாழ்க்கையில் அடியெடுத்து வைக்க முடியாது. இத்தகைய அபூர்வமான வாழ்க்கை, தெய்வீகமான வாழ்க்கை உங்களுக்குக் கிடைத்திருப்பதால் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். மனிதப் பிறவியின் வாழ்வின் லட்சியம், இந்த உடல் இருக்கும்போதே இந்த உடலைப் படைத்தவனைக் காண்பதுதான், அப்போதுதான் மோட்சம் கிடைக்கும்.

இந்த ஆன்மீக வாழ்க்கையில் இருப்பவர்கள், அதாவது இந்தத் தெய்வீக வாழ்க்கையில் இருப்பவர்கள் எப்போதும் தெய்வீகச் சிந்தனையிலேயே இருப்பார்கள். தெய்வீகச் சிந்தனை என்பது ஒரு உயர்ந்த எண்ணம், உயர்ந்த எண்ணம் என்றால், இந்தப் பரமாத்மாவை விட

சிறந்தது இந்தச் சிருஷ்டியில் எதுவுமில்லை என்பதே. எனவே, அவரை எப்படித் தெரிந்துகொள்வது? அவரை எப்படி அடைவது? என்பதே அவர்களின் சிந்தனையாக இருக்கும்.

இந்த உடல் இருக்கும்போதே அவரைத் தரிசிக்க முடிந்தால் மோட்சம் கிடைக்கும் என்பதை குருமார்கள் மூலம் தெரிந்துகொள்கிறார்கள். அதனால்தான் அவர்களின் பார்வை எப்போதும் பரமாத்மாவின் மீதே இருக்கும். அந்தப் பரமாத்மாவை எப்படி அடைய வேண்டும் என்ற சிந்தனையிலேயே அவர்கள் இருப்பார்கள். அவர்கள் எப்போதும் நிகழ்காலத்திலேயே வாழ்வார்கள், அவர்களின் எண்ணங்களும் நிகழ்காலத்திலேயே இருக்கும், அவர்கள் எப்போதும் நேர்மறைச் சிந்தனையுடன் (Positive Thinking) இருப்பார்கள். வாழ்க்கையில் எது நடந்தாலும், அதெல்லாம் என் நன்மைக்கே என்று அவர்கள் நினைப்பார்கள்.

இத்தகைய தெய்வீக வாழ்க்கையை வாழும் மனிதர்களைத் 'தெய்வீக மனிதர்கள்' என்று அழைக்கலாம், ஏனெனில் இவர்கள் பரமாத்மாவை அடைய சாதனை செய்கிறார்கள். இவர்கள் எப்படிச் சிந்திப்பார்கள் என்றால் - நான் இந்தப் பூமிக்கு வருவதற்கு முன்பே பஞ்சபூதங்கள் வழியாகவும், இயற்கையின் வழியாகவும் அந்த இறைவன் எனக்கான அனைத்தையும் ஏற்பாடு செய்து வைத்துள்ளார். எனக்குத் தேவையான அனைத்தும் இந்தப் பூமியில் உள்ளன, எதற்காகவும் நான் தேடி அலைய வேண்டிய அவசியமில்லை என்று உணர்ந்திருப்பார்கள்.

மனிதனுக்கு உடல் இருப்பதால் தினமும் உணவு உட்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, நாம் இந்தப் பூமியில் பிறப்பதற்கு முன்பே நமக்கான உணவு படைக்கப்பட்டிருக்கிறது. தியானப் பயிற்சி செய்பவர்கள்,

இந்த ஏற்பாடுகள் அனைத்தையும் இறைவன் தனக்காகச் செய்திருக்கிறான் என்ற நன்றியுணர்வுடன் இருப்பார்கள். தினமும் நீங்கள் உணவு உண்ணும்போது, அந்த இறைவனுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டே உண்ண வேண்டும். இந்த உடலைக் காப்பாற்ற உணவை வழங்கி, தியானப் பயிற்சிக்கு ஏற்றவாறு இந்த உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கும் அந்த இறைவனுக்குத் தினமும் நன்றி சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

தியானப் பயிற்சி (சாதனா) செய்யும் எப்போதும் மனநிறைவுடன் வாழ வேண்டும், அதாவது எந்தவிதக் கவலையும் இல்லாமல் பயிற்சி செய்ய வேண்டும். கவலைப்படுபவர் ஒருபோதும் பயிற்சி செய்ய முடியாது என்பதால், நீங்கள் பயிற்சி செய்யும் போது மனநிறைவுடன் வாழ வேண்டும், கவலைகள் இல்லாமல் பயிற்சி செய்ய வேண்டும், மௌனமாக இருக்க வேண்டும், ஞானத்தை வளர்த்துக் கொள்ள ஏக்கத்துடன் இருக்க வேண்டும். கவலையில் இருப்பவர் ஒருபோதும் நிம்மதியாக தியானப் பயிற்சி செய்ய முடியாது. ஆனால் உங்களிடம் இருப்பதே போதும் என்று நினைத்தால் தியானப் பயிற்சி சிறப்பாக அமையும்.

அதனால்தான் மௌனம், தவம், ஸ்வாத்யாயம்(சுய கற்றல்)ஆகியவை மிகவும் முக்கியம். தவம் என்பது உலகத் தேவைகளைக் குறைத்துக் கொள்வதாகும். உலக ஆசைகள் மனிதனுக்கு எந்தளவுக்கு உயர்கிறதோ, அந்தளவுக்கு அவன் வீழ்ச்சியடைகிறான். ஏனெனில், உலக ஆசைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து பிறந்து கொண்டே இருக்கும். அவ்வாறு உலக ஆசைகளின் பின் தொடரும் போது, ஆன்மீகப் பயிற்சியில் முன்னேற்றம் இருக்காது. அதனால்தான் மௌனமாக இருத்தல் என்பது முதல் படியாகும். தவம் என்பது உலகத்

தேவைகளைக் குறைத்துக்கொண்டு, தனிமையில் இருக்க விரும்புவதாகும்.

சாதகன் ஏன் அதிக தனிமையை விரும்ப வேண்டும் என்றால், வெளி உலகத் தொடர்பால் மனம் அமைதியற்றதாகிவிடும். நீங்கள் மீண்டும் கவலைகளில் சிக்கிக் கொள்வீர்கள், என்பதால் தான் தனிமையை விரும்ப வேண்டும்.

உங்கள் ஞானத்தின் மூலம் நீங்கள் பத்துப் பேருக்காவது பயன்பட வேண்டும். உங்கள் ஞானம் மற்றவர்களுக்குப் பயன்படும் போதுதான் நீங்கள் ஒரு மகாத்மாவாக ஆவீர்கள்.

உங்களிடம் ஞானம் இருக்கும் போது அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போது, மக்கள் அனைவரும் உங்களால் ஈர்க்கப்படுவீர்கள். பணம், தோற்றம் அல்லது பதவியால் ஏற்படும் ஈர்ப்பு தற்காலிகமானது மட்டுமே.

உங்களிடம் பணம் இருக்கும்போது, அவர் எவ்வளவு செல்வந்தர் என்று மக்கள் சில காலம் ஈர்க்கப்படுவீர்கள். அதேபோல் பதவியில் இருக்கும் வரை உங்களைச் சுற்றி வருவார்கள், பதவி போனதும் உங்களை யாரும் மதிக்க மாட்டார்கள். அதேபோல், ஒரு சினிமா நடிகர் இளமையாகவும் அழகாகவும் இருக்கும்போது பலர் அவரைப் பார்க்க விரும்புவார்கள், ஆனால் அவர் முதுமையடைந்த பிறகு, அவர் முகத்தைக் கூடப் பார்க்க மாட்டார்கள்.

ஆனால், ஒரு ஞானியிடம் இருக்கும் ஈர்ப்பு என்பது எப்போதும் ஒளிவீசும் விளக்கைப் போன்றது. ஒரு விளக்கு எப்படி ஒளியைத் தருகிறதோ, அப்படியே ஒரு ஞானி தன் அறிவை அனைவருக்கும் பகிர்ந்து கொண்டே இருப்பார். இந்த சிருஷ்டியில் உள்ள ரகசியம்

என்னவென்றால், எதை பகிர்ந்தால் அது வளருமோ, எதைத் தானம் செய்தால் குறையாமல் இருக்குமோ, அதுவே உலகியல் ஞானம் மற்றும் ஆன்மீக ஞானம் ஆகும்.

அதனால்தான் ஒரு ஞானி எப்போதும் தியானம் அல்லது பயிற்சியின் மூலம் தனது ஞானத்தை வளர்த்துக் கொள்கிறார். அவர் பெற்ற ஞானத்தை மற்றவர்களும் பகிர்ந்து கொள்கிறார். அதனால்தான் பத்ரிஜி அவர்கள் எப்போதும் சொல்வார்கள், ஞானத்தைப் பகிர்ந்தால் அது பெருகும், ஆனால் பதுக்கி வைத்தால் அது திருடப்படும் அல்லது பயனற்றதாகி விடும் என்று கூறுவார்.

அதனால்தான் ஓடும் நதியில் நீர் எப்போதும் சுத்தமாக இருக்கும். அதுபோலவே, நம் வீட்டில் உள்ள கிணற்றில் தினமும் நீரை இறைத்துக் கொண்டே இருந்தால் அந்த நீர் தூய்மையாக இருக்கும். ஆனால் யாரையும் தண்ணீர் எடுக்க விடாமல் தேக்கி வைத்தால், அந்த நீர் சில நாட்களில் அந்த நீர் கெட்டுப்போகும். அதுபோலவே, உங்கள் வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட்டு சம்பாதித்துச் சேர்த்து வைத்த செல்வத்தை உங்கள் பிள்ளைகள் எடுத்துக் கொள்வார்கள். உங்களுக்கு ஏதேனும் பதவிகள் இருந்தால் மற்றவர்கள் அதைக் கைப்பற்றுவார்கள். ஆனால் உங்களிடம் உள்ள ஞானத்தை மட்டும் யாராலும் திருட முடியாது.

வசிஷ்ட முனிவர் மனிதர்களுக்கு மற்ற எல்லாவற்றையும் விட மூன்று வகையான மதங்கள் அதிகம் என்று கூறுகிறார். அவை:

* ரூப மதம் (அழகின் மீதான கர்வம்)
* தன மதம் (செல்வத்தின் மீதான கர்வம்)
* வித்யா மதம் (கல்வியின் மீதான கர்வம்.

ரூப மதம் என்றால் நான் “ மிகவும் அழகானவர்” என்று நினைப்பது ரூப மதம். நான் நன்றாகப் படித்தவன் என்னிடம் பல பட்டங்கள் உள்ளன என்று நினைப்பது வித்யா மதம். ஆனால் இந்தக் கலியுகத்தில் கல்வியை விட பதவியின் மீது அதிக ஆர்வம் இருப்பதால், பதவி மதம் கூட இருப்பதாகச் சொல்லலாம். அதேபோல், "நான் பெரும் பணக்காரன், கோடீஸ்வரன்" என்று நினைக்கும் தன மதம் சிலருக்கு இருக்கும்.

ஆனால் ஞானம் உள்ளவர் எப்போதும் மதிக்கப்படுவார். அதனால்தான் அறிவை ஒளியுடனும், அறியாமையை இருளுடனும் ஒப்பிடுகிறார்கள். ஒரு அறை 100 ஆண்டுகளாகப் பூட்டப்பட்டு இருட்டாக இருந்தாலும், அந்த இருட்டைப் போக்க ஒரு சிறிய விளக்கை ஏற்றினால் போதும், அந்த அறை முழுவதும் ஒளிமயமாகும். அதுபோலவே, உங்களுக்குள் இருக்கும் அறியாமையை ஒரு சத்குருவினால் மட்டுமே நீக்க முடியும். உங்களுக்குள் இருக்கும் பல ஜென்ம கால அறியாமையை நீக்க வேண்டுமென்றால், ஒரு சத்குருவைச் சரணடைய வேண்டும்.

அறியாமை என்பது இந்த உலகம் நிலையானது, உடல் நிலையானது என்று நினைப்பதாகும். ஞானம் என்பது இந்த உலகமும் அழியக்கூடியது, உடலும் அழியக்கூடியது, ஆனால் ஆன்மா அழிவற்றது என்பதை உணர்வதாகும். நான் ஆன்மா, பரமாத்மாவின் ஒரு அம்சம், என்னாலும் பரமாத்மா நிலையை அடைய முடியும் என்று உணர்ந்து கொள்வதே உண்மையான ஞானம்.

இந்த ஞானத்தைப் பெற்றவுடன், உங்களை விட்டு அறியாமை அகலும். அறியாமை இருக்கும் வரை கவலை இருக்கும். நான் உடல் அல்ல, நான் ஆன்மா என்று

பயிற்சியின் மூலம் அனுபவப்பூர்வமாக உணரும் நாளில், ஆன்மாவில் இருக்கும் எல்லையற்ற ஞானத்தை நீங்கள் அனுபவிப்பீர்கள். நீங்கள் கவலையில் இருக்கக் கூடாது, எப்போதும் ஆன்ம சிந்தனையிலேயே இருக்க வேண்டும் என்று குருமார்கள் மீண்டும் மீண்டும் கூறுகிறார்கள்.

அதனால்தான், அறியாமையில் இருப்பவரின் குணங்கள் எப்படி இருக்கிறது? ஒரு சாதகனின் குணம் எப்படி இருக்கிறது? உலக வாழ்க்கையில் இருப்பவரின் எண்ணங்கள் எப்படி இருக்கின்றன? ஆன்மீக வாழ்க்கையில் இருக்கும் ஒரு சாதகனின் எண்ணங்கள் எப்படி இருக்கின்றன? உலக வாழ்க்கையில் இருப்பவர் எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்கிறார்? ஞானத்தைப் பெற்றவர் எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்கிறார்? என்பதை நாம் விசாரணை செய்தால் உண்மை புரியும்.

ஞானமுள்ள ஒருவர் எப்போதும் பரமாத்மா சிந்தனையில் இருப்பார். அவர் மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பார். எவ்வளவு பெரிய இழப்பு ஏற்பட்டாலும் அதைத் தாங்கிக்கொள்ளும் நிலைக்கு அவர் வளர்கிறார். அதனால்தான், உலக வாழ்க்கை கவலையோடு தொடங்கி கவலையோடு முடிகிறது, ஏனெனில் அந்த வாழ்க்கை ஒருபோதும் முழுமையான திருப்தியைத் தருவதில்லை.

ஆசைகளுடன் இருப்பவர் எப்போதும் கவலையிலேயே இருப்பார். ஆனால் ஒரு உயர்ந்த நோக்கத்திற்காக வாழ்பவர், எப்போதும் பரமாத்மா சிந்தனையுடன் திருப்திகரமான வாழ்க்கையை வாழ்வார். ஒரு சாதகன் எப்போதும் சாதகனாக மட்டும் இருப்பதில்லை, அவர் தனது குருவின் பயிற்சியின் மூலம் உயர்ந்த நிலையை அடைகிறான்.

பயிற்சியின் மூலம் ஞானம் வளரும்போது, அது உங்களோடு மட்டும் நின்றுவிடாமல், உங்களுக்கு தெரிந்ததை மற்றவர்களுக்கும் சொல்லுங்கள். நீங்கள் எந்த மகிழ்ச்சியைப் பெறுகிறீர்களோ, அந்த மகிழ்ச்சியைப் பற்றி மற்றவர்களிடமும் சொல்லுங்கள். நீங்கள் எந்த சத்தியத்தை அறிந்தீர்களோ அதை மற்றவர்களிடம் சொல்லுங்கள். இது போன்ற பல விஷயங்களை நமக்கு பத்ரிஜி அவர்கள் கற்றுக் கொடுத்தார்.

எல்லாவற்றையும் விடப் பெரிய உண்மை என்னவென்றால், நீ உடல் அல்ல, ஆன்மா. இந்த உண்மை தெரியாததால் மக்கள் அறியாமையில் இருக்கிறார்கள். இந்த உண்மை தெரியவரும்போது அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். ஏனென்றால், கடவுள் யார் என்று தெரியாமல் அனைவரும் குழப்பத்தில் உள்ளனர். கடவுள் மீது பக்தி இருக்கிறது, ஆனால் கடவுள் யார் என்று தெரிந்து கொள்ள முடியாத கவலையில் இருக்கிறார்கள்.

ஆன்மாவே கடவுளாக அனைத்து உயிரினங்களின் உடலிலும் அந்தர்யாமியாக இருக்கிறது. அந்த ஆன்மாவைத் தெரிந்துகொள்ளும் தகுதி மனிதப் பிறவிக்கு மட்டுமே உண்டு. எனவே, இத்தகைய அரிய மனிதப் பிறவியை எடுத்து, ஒரு சத்குருவின் மூலம் அந்தப் பயிற்சியைச் செய்து அனுபவத்தைப் பெற்று நான் ஆன்மா என்ற உணர்வை அறிந்த பிறகு அந்த ஞானத்தை மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்று குருமார்கள் கூறுகிறார்கள்.

ஒரு சத்குரு உங்கள் வாழ்வில் வந்த பிறகு மரணத்தைப் பற்றிய பயம் இருக்காது. ஒரு நேர்காணலில் பத்ரிஜியிடம், உங்களுக்குப் பிறகு உங்கள் சீடர்கள் யார்? என்று கேட்டபோது, எனக்குப் பிறகு

அனைவரும் பத்ரிஜிகளே" என்று அவர் பதிலளித்தார். அதனால்தான் பத்ரிஜி, உன் சுவாசமே உன் குரு என்று கூறுவார். நான் இந்த விஷயங்களை எப்படிச் சொல்கிறேனோ, அதேபோல் நீங்களும் தியானம் செய்யும்போது உங்களுக்குள் இருக்கும் ஞானம் வெளிப்படும் என்றார்.

நீங்கள் எல்லையற்ற ஞானியாகவும், எல்லையற்ற புத்திசாலியாகவும், பிரம்மஞானியாகவும் மாறுவீர்கள் , எளிய ரகசியம்  மூச்சின் மீது கவனம் தியானம் செய், பெற வேண்டிய அனைத்தையும் பெறுவாய், பெற்றதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள் என்று கூறிவிட்டு பத்ரிஜி அவர்கள் நிம்மதியாக மரணமடைந்தார்.

அதனால்தான் ராகவராவ் அவர்கள் அனைவருக்கும் நீங்கள் பெற்ற ஞானத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறிக்கொண்டே இருப்பார். நாம் செய்யும் தவறுகளைச் சரி செய்து கொண்டே இருப்பார்.முதலில் நமது தவறுகளை ஒப்புக்கொள்ளும் தைரியம் நமக்கு இருக்க வேண்டும். மற்றவர்கள் நம்மை தாழ்வாக நினைப்பார்களோ என்ற எண்ணம் இருக்கக்கூடாது,  குருவிற்கு உங்கள் தவறுகளும் நல்வழிகளும்  அனைத்தும் தெரியும். நீங்கள் எங்கே தடுமாறுகிறீர்களோ, அங்கே  குரு கவனித்து உங்களை எச்சரிப்பார். அதற்காக நீங்கள் கவலைப்பட தேவையில்லை, என்னைத் திருத்தினால் தான், நான் இருக்கும் நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு வளர முடியும் என்று நினைக்க வேண்டும்.

என் ஏனென்றால் நீங்கள் வளர்வதற்கும், பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கும் இந்தப் பூமிக்கு வந்திருக்கிறீர்கள். அந்தப் பாடங்களைக் கற்றுக்கொள்ள உங்களை குரு ஒவ்வொரு கணமும் சரி செய்து

கொண்டிருக்க வேண்டும். நீங்கள் ஒவ்வொரு கணமும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும், மேலும் அந்தப் பரமாத்மா சிந்தனையில் இருக்கும்போது நிம்மதியாக நீங்கள் ஞானத்தைப் பெறுவீர்கள்.

சாதகனின் லட்சியம் அந்தப் பரமாத்மாவை அடைவதாகும். உலக வாழ்க்கையில் இருப்பவரின் லட்சியம் இன்பங்களையும், சுகபோகங்களையும் அனுபவிப்பதாகும். அதனால்தான் நீங்கள் எப்போதும் எங்கே இருக்கிறீர்கள்

என்பதை அறிந்திருக்க வேண்டும்? உங்களுக்கு எத்தகைய எண்ணங்கள் உள்ளன? நீங்கள் எந்தப் பாதையில் செல்ல வேண்டும்? நான் எப்படி இருக்கிறேன்? உலக சிந்தனையில் இருக்கிறேனா? ஆன்மீகச் சிந்தனையில் இருக்கிறேனா? என்று அவ்வப்போது உங்களை நீங்களே கவனித்துக்கொண்டு சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஒரு செடி வளர்வதற்குக் காரணம் அதன் வேரே, அந்த வேர் எவ்வளவு வலுவாக இருக்கிறதோ செடியும் அவ்வளவு வலுவாக வளர்ந்து கொண்டே இருக்கும். அதுபோலவே, கண்ணுக்குத் தெரியும் இந்த வாழ்க்கைக்குக் கண்ணுக்குத் தெரியாத ஆன்மாவே ஆதாரம் என்று தெரிந்துகொள்ள வேண்டும். அதனால்தான் குரு கொடுத்த தியானப் பயிற்சி, மற்றும் சஜ்ஜன சாங்கத்யம் (நல்லோரின் சேர்க்கை) எவ்வளவு அதிகமாகச் செய்கிறீர்களோ அவ்வளவு பெரிய ஞானிகளாக மாறுவீர்கள், அவ்வளவு அதிக சக்தி படைத்தவர்களாகவும் மாறுவீர்கள், அதனால்தான் குரு-சீடர் பந்தம் என்பது ஒரு மரத்தின் வேர் போன்றது.

நிறைய பயிற்சி செய்து சக்தியைப் பெறுகிறார்கள், அந்தச் சக்தியை நீங்கள் வீணாக்கக் கூடாது. உங்களுக்குச் சம்பந்தம் இல்லாத விஷயங்களில் தலையிடக் கூடாது. அதனால்தான் மௌனமாக இருப்பது, தேவையற்ற சிந்தனைகள் இல்லாமல் பார்த்துக் கொள்வது, தேவையற்ற விவகாரங்களில் ஈடுபடாமல் இருப்பதும் அவசியம். சாதனை மற்றும் ஸ்வாத்யாயம் செய்து கொண்டே இருந்தால், சாதனையின் மூலம் சக்தியைப் பெறுவீர்கள். ஸ்வாத்யாயம் மற்றும் ஸஜ்ஜன சாங்கத்யம் (நல்லோர் சேர்க்கை) ஆகிய இவ்விரண்டின் மூலம் ஞானம் வளர்ந்து கொண்டே இருக்கும். இந்த இரண்டும் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

இவற்றைக் கடைப்பிடித்து, கவலை இல்லாத வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு, எப்போதும் பரமாத்ம சிந்தனையில் இருக்க வேண்டும். எனவே எப்போதும் துக்கப்படாமல் வாழ வேண்டும். ஒருவேளை துக்கம் வந்தால் இது 'எனது கர்ம பலன், இதை அனுபவித்தால் தீர்ந்துவிடும்' என்று எண்ண வேண்டும். அத்தகைய துக்கமில்லாத வாழ்க்கையை வாழ்வதற்குக் காரணமான அந்த குருமார்களுக்கு எப்போதும் நன்றியுடன் இருக்க வேண்டும்.

# உலக வாழ்க்கையில் மனிதன் எப்படி இருப்பான்?

ஒவ்வொரு மனிதனும் எப்படிப் பிறந்தாலும், எந்தக் குலத்தில், எந்த மதத்தில் பிறந்தாலும் முதலில் உலக வாழ்க்கையை பார்த்து விட்டு, அதன் பிறகுதான் ஆன்மீக வாழ்க்கைக்கு வருகிறான். ஆனால் சிலர் ஒரே பிறவியில் உலக வாழ்க்கை, ஆன்மீக வாழ்க்கை ஆகிய இரண்டையும் அனுபவிக்கிறார்கள். அத்தகையவர்கள் ஒரே பிறவியில் பூரண மனிதர்களாக ஆக முடியும். ஆன்மீக வாழ்க்கைக்கு வந்தவர்கள் திருப்தியாக வாழ முடியும். எவ்விதமான கவலைகளோ, ஆவேசங்களோ இன்றி, அரிஷெட்வர்க்கங்களை (காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம்) கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, அந்த இறை தத்துவத்தை உணர்ந்து அமைதியாக வாழ்வார்கள். அதனால்தான் உலக வாழ்க்கையை விட ஆன்மீக வாழ்க்கை மிகவும் மேலானது.

உலக வாழ்க்கையில் மனிதன் எப்படி இருப்பான், எத்தகைய குணங்களைக் கொண்டிருப்பான், எத்தகைய பண்புகளைக் கொண்டிருப்பான் என்பதை இப்போது பார்ப்போம்.

உலக வாழ்க்கை முழுவதும் கவலைகளால் நிறைந்திருக்கும். ஏனென்றால் எது சத்தியம்? எது நிலையமானது? சுகம் என்றால் என்ன? சந்தோஷம் என்றால் என்ன? ஆனந்தம் என்றால் என்ன? என்ற விசாரணை இல்லாததால் எப்போதும் கவலையிலேயே இருப்பார்கள். அதிலிருந்து வெளியே வர

வேண்டுமென்றால் விவேகத்துடன் சிந்திக்கத் தெரிய வேண்டும்.

மனிதன் எவ்வளவு செல்வம் சம்பாதித்தாலும், எத்தனை பதவிகள் இருந்தாலும், எத்தனை பட்டங்களைப் பெற்றிருந்தாலும், வாழ்க்கையில் எது நிலையானது என்பது தெரியாமல் எப்போதும் கவலையிலேயே வாழ்ந்து, நிலையற்றவற்றிற்காகத் தவித்துப் போராடி வாழ்க்கையையே வீணாக்கிக் கொள்கிறார்கள்.

உலக வாழ்க்கையில் அனைவரது பார்வையும் செல்வம் ஈட்டுவதிலேயே இருக்கும். ஆன்மீக வாழ்க்கையிலும் செல்வம் மீது ஆர்வம் இருக்கும், ஆனால் இந்த உடல் நிரந்தரமானது அல்ல, இந்த உலகம் நிலையானது அல்ல என்று உணர்ந்து அதன் மீதான பற்றைக் குறைத்துக் கொள்கிறார்கள். மனிதனுக்கு இருக்கும் ஆசைகள் இந்தப் பிறவியால் வந்தவை அல்ல, அவை பல பிறவிகளின் சமஸ்காரங்கள் , இறைவனைப் பற்றிய சரியான புரிதல் இல்லாததாலேயே கோரிக்கைகளை தீர்ப்பவர், அனைத்தையும் தருபவர் என்று உலக வாழ்க்கையில் உள்ளவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள்.

இந்த உலகில் மூன்றில் இரண்டு பங்கு மனிதர்கள் இவ்வாறே இருக்கிறார்கள். எவ்வளவு சம்பாதித்தாலும் வாழ்க்கையில் திருப்தி என்பது இல்லாமல் வாழ்கிறார்கள். ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறார்கள், அவர்களின் பூர்வ ஜென்ம புண்ணியத்தினாலோ அல்லது அவர்களின் அதிர்ஷ்டத்தினாலோ அந்த ஆசைகள் நிறைவேறினாலும் திருப்தி என்பது இல்லாமல் வாழ்கிறார்கள்.

இவ்விதமாக மனிதன் தன் அஞ்ஞானத்தினால் எப்போதும் செல்வத்திற்காகத் தவித்துக் கொண்டிருப்பான். இறுதியில் செல்வம் சம்பாதித்த பிறகு, அந்தச் செல்வம் எங்கே கையை விட்டுப் போய்விடுமோ என்று கவலைப்படுகிறான். அந்தச் செல்வம் இல்லாவிட்டால் தன்னைச் சுற்றியுள்ளவர்கள் தன்னை மதிக்க மாட்டார்களோ என்று யோசித்துக் கொண்டிருப்பான். அந்தச் சம்பாத்தியத்திற்காகவே நட்பைத் தொலைக்கிறான், உறவுகளைத் தொலைக்கிறான், அதாவது யாரையும் நம்ப முடியாத நிலைக்குத் தாழ்ந்து போகிறான்.

அவ்வாறு செல்வத்தைப் பற்றிய சிந்தனை எவ்வளவு தூரம் இருக்குமோ, அதுவரை தெய்வ சிந்தனை இருக்காது. அவன் வாழ்க்கையில் எப்போதும் வேதனையுடனேயே இருப்பான். உலக ஆசைகள் எவ்வளவு அதிகரிக்கிறதோ அவ்வளவு தூரம் அவன் வீழ்ச்சியடைவான், வாழ்க்கையில் எப்போதும் அமைதியும் சுகமும் இருக்காது.

ஒவ்வொருவருக்கும் பணம் அவசியம்தான், ஆனால் அதுவே வாழ்க்கையாகிவிடக் கூடாது. ஆனால் மனிதன் பணத்தின் பின்னால் ஓடி, தன் சக்தி முழுவதையும் செல்வம் சம்பாதிப்பதற்கே செலவிட்டு தன் வாழ்க்கையையே வீணாக்குகிறான். அளவற்ற சக்தி கொண்ட மனிதன், அழிந்து போகக் கூடிய இந்த உலகத்தைப் பார்த்து, 'அனைவரும் தன்னைப் புகழ வேண்டும், உடலைச் சுகமாக வைத்திருக்க வேண்டும், உறவினர்களிடையே தான் உயர்ந்தவனாக இருக்க வேண்டும், தன் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் மகாராஜாக்களைப் போல வாழ வேண்டும்' போன்ற

ஆசைகளால் நாள்தோறும் அமைதி இல்லாமல் வாழ்கிறான்.

உலக சிந்தனை கொண்ட மனிதனுக்குக் காலம் கைகூடாத போது, அதாவது கடந்த பிறவியில் ஒருவனுக்குப் புண்ணிய கர்மாக்கள் இல்லாதபோது, அவன் எவ்வளவு முயற்சி செய்தாலும் அவனுக்குக் காலம் கைகூடி வராது. அத்தகைய சமயத்தில் தான் நினைத்ததைச் சாதிக்க முடியாமல், அவன் பல தீய குணங்களுக்கு அடிமையாகி விடுகிறான்.

நீங்கள் கவனித்தால், சிலர் தாங்கள் நினைத்ததைச் செய்ய முடியாவிட்டால் அந்த வேதனையைத் தாங்க முடியாமல் போகும் போது, அந்த வேதனையை தாங்கமுடியாமல் மதுவுக்கு அடிமையாகிப் போவார்கள். அத்தகையவர்கள் தங்கள் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்வது மட்டுமல்லாமல், தங்கள் குடும்பத்தில் உள்ள மனைவி மற்றும் குழந்தைகளையும் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாக்குவார்கள்.

பாகவதத்தில் கூட மது அருந்துவது என்பது வெறும் பாவம் மட்டுமல்ல, மகாபாவம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த ஆன்மீக வாழ்க்கைக்கு வந்தவர்கள் இத்தகைய செயலைச் செய்தால் அவர்கள் மிகப்பெரிய பாவம் செய்தவர்களாகிறார்கள்.

வாழ்க்கையில் கஷ்டங்கள் மற்றும் வேதனையைத் தாங்க முடியாமல் மன அழுத்தத்தால் இருப்பவனைப் பார்த்து, அவனது நண்பர்கள் மது அருந்தினால் கவலைகள் நீங்கும் என்று கூறி அவனுக்கு அதைப் பழக்கப்படுத்துவார்கள். இத்தகைய நண்பர்கள் இருந்தால் அவன் வாழ்க்கையில் பெரிதும் நஷ்டமடைவான். அதனால்தான் ஒரு சாதகனுக்கு எப்போதும் நல்லவர்களின் சகவாசத்தில் (சஜ்ஜன சாங்கத்யம்)

இருக்க வேண்டும் என்று குருமார்கள் எப்போதும் கூறுகிறார்கள். கெட்டவர்களுடன் நட்பு கொண்டால் தீய பழக்கங்களும், தீய எண்ணங்களும் ஒட்டிக்கொள்ளும்.

நீங்கள் கவனித்தால்,கிருஷ்ணருடன் நட்பு கொண்டு கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்ட பாண்டவர்கள் வெற்றியை அடைந்தார்கள். ஆனால், சகுனியுடன் நட்பு கொண்ட துரியோதனன் அந்தப்புரத்தில் இருந்தும் கூட, தூக்கமின்றி, சுகபோகங்களை அனுபவிக்க முடியாமல் எப்போதும் கவலையிலேயே இருந்தான். தர்மராஜர் மைத்துனர் (கிருஷ்ணர்) என் பக்கம் இருக்கிறார், அவர் என்னைக் காப்பாற்றுவார் என்று நிம்மதியாக இருந்தார். "நல்லோர்களுடன் சகவாசம் நமக்கு நிம்மதியைத் தரும், தீயவர்களின் சகவாசம் எப்போதும் கவலையைத் தரும்".

அசல் கவலைக்குக் காரணம் என்ன? என்று எவருக்குத் தாமே விசாரணை (ஆராய்வு) செய்து கொண்டால், நான் உலக விஷயங்களை நோக்கிச் செல்வதால் கவலைகள் வருகின்றன, எப்போது இருப்பதைக் கொண்டு திருப்தி அடைகிறேனோ, அப்போது எனக்கு நிம்மதியான வாழ்க்கை கிடைக்கும் என்று உணர்ந்து கொள்கிறார்கள்.

திருப்தி இல்லாத வாழ்க்கை எப்போதும் கவலை தரும், திருப்தி உள்ள வாழ்க்கை எப்போதும் நிம்மதி தரும். இறைவன் யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமோ, அவர்களின் கடந்த கால புண்ணியத்திற்கு ஏற்ப வழங்குகிறார். ஆனால் நீங்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும், அதற்காக உங்கள் வாழ்க்கையையே செலவிட்டாலும் பலன் கிடைக்காமல் போகலாம்.

மனிதனின் வாழ்க்கையில் கஷ்டம், துக்கம் ஏன் இருக்கிறது என்றால் - நான் உடல் என்று நினைக்கும்போதும், இந்த உலகம் நிலையானது என்று

நினைக்கும்போது எப்போதும் பயத்துடன் வாழ்கிறார்கள். உலகம் என்ன நினைக்குமோ என்ற பயத்திலேயே காலத்தை கழிக்கிறார்கள். பந்தங்களுடன் வாழ்ந்து கொண்டு, தனக்கு சுகமான வாழ்க்கை கிடைக்க வேண்டும் என்று எண்ணி, அதற்காகச் செல்வம் ஈட்டவும், பதவிகளை அடையவும் எத்தனையோ முயற்சிகளைச் செய்கிறார்கள். அந்த முயற்சி தோல்வியடையும் நாளில் தீய பழக்கங்களுக்கு அடிமையாகி இன்னும் துக்கத்தில் மூழ்கிப் போகிறார்கள். இவ்விதமாக வாழ்ந்து கொண்டு, ஒவ்வொருவரையும் சந்தேகித்துக்கொண்டு, மிகுந்த வேதனையை அனுபவித்துக்கொண்டு, எப்போதும் பயத்துடனும் கவலையுடனும் நிம்மதி இல்லாமல் வாழ்கிறார்கள்.

நிறையச் செல்வம் சம்பாதித்தால்அனைவரும் என்னைப் புகழுவார்கள், அனைவரும் என்னை மதிப்பார்கள் என்று எண்ணி, மற்றவர்களுக்கு எவ்வித உதவியும் செய்யாமல் வாழ்ந்து, இறுதியில் முதுமை வந்த பிறகு சில காலத்திற்கு பிறகு இறந்து போகிறான். அப்போது அவனைச் சுற்றியிருக்கும் உறவினர்களோ அல்லது நண்பர்களோ என்ன சொல்வார்கள் என்றால் - வாழ்க்கை முழுவதும் எவ்வளவோ ஆசைப்பட்டுச் சம்பாதித்தான், போகும்போது எதையாவது எடுத்துச் சென்றானா? என்றால் இல்லை, பணத்தை எடுத்துச் செல்லவில்லை, பதவிகளை எடுத்துச் செல்லவில்லை, உயிரோடு இருந்தபோது ஒருவருக்குக் கூட உதவி செய்யவில்லை, ஒரு நற்செயலைக் கூடச் செய்யவில்லை என்று நினைப்பார்கள். அதனால்தான் உலக வாழ்க்கை வாழ்பவர்களுக்கு இறுதியில், ஆசீர்வாதங்கள் அல்ல, அவதூறுகள் மட்டுமே தங்களுக்கு வரும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தத் தியான மார்க்கத்திற்கு வந்த பிறகும் கூட, இன்னும் சிலருக்கு பதிவுகள், சம்ஸ்காரங்கள் (குணங்கள்) நீங்காமல் உலக வாழ்க்கையைப் பற்றிய கவலைகள் இருக்கின்றன. செல்வம் மீதோ, பதவிகள் மீதோ கவலை இல்லாவிட்டாலும், வெளியே சென்று வகுப்புகள் எடுக்கும்போது அனைவரும் தன்னைப் புகழ வேண்டும், தன்னைப் பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். ஆனால், நீங்கள் சத்தியத்தைச் சொல்லும்போது உலகம் உங்கள் பின்தொடரும், அசத்தியத்தைச் சொல்லும்போது எத்தனையோ விமர்சனங்கள் வரும்.

சத்தியத்தைப் போதிக்கும்போது உங்கள் முன்னால் பாராட்டாவிட்டாலும், உங்களுக்கு பின்னால் புகழ்வார்கள். நீங்கள் சத்தியத்தில் வாழ்ந்தால் உலகிற்காக இல்லாமல் பரமாத்மாவிற்காகப் பணியாற்றுவீர்கள், அப்போதுதான் நீங்கள் அந்தப் பரமாத்மாவிற்குப் பிரியமானவர் ஆவீர்கள். இதே விஷயம் நமக்கு பகவத்கீதையிலும், உபநிடதங்களிலும் சொல்லப்பட்டுள்ளது.

உலக வாழ்க்கை நிரந்தரம் என்று நினைப்பவன் அஞ்ஞானி, பரமாத்மாவின் பக்கம் திரும்பி அவரே நித்தியமானவர் என்று உணர்ந்தவன் ஞானி. அதனால்தான் ஒவ்வொருவரையும் அஞ்ஞானத்திலிருந்து ஞானத்தை நோக்கித் திருப்ப வேண்டும். இதைவிடப் புண்ணிய காரியம் இந்தப் பூமியில் வேறு எதுவும் இல்லை என்று உபநிடதங்களில் சொல்லப்பட்டுள்ளது.

அதனால்தான் பத்ரிஜி அவர்கள் நம்மைத் தியானம் செய்ய வைப்பது மட்டுமல்லாமல், தியானப் பிரசாரத்தையும் செய்ய வைத்தார். ஏனென்றால் இந்தப் பூமியில் செய்யப்படும் புண்ணிய காரியங்களிலேயே மிகச் சிறந்த புண்ணிய காரியம், ஒரு மனிதனை ஞானியாக மாற்றுவதாகும்.

நான் ஜீவன், உயிரோடு இருப்பவனே ஜீவன், எனக்கு மரணம் இல்லை என்று உணர்ந்தவனே தேவன். உடல் மறைந்தாலும் நான் இருப்பேன், நான் நிலையானவன் என்று எண்ணும் ஞானி தெய்வமாகிறான். அதனால்தான் உலக மனிதன் எப்போதும் இந்த உலகம் தன்னைப் புகழ வேண்டும், இந்த உடல் நிலையானது, இந்த உடல் இருக்கும்போதே புகழ், ஆஸ்தி, கௌரவம் மற்றும் அந்தஸ்துகளைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறான்.

இந்த உலக வாழ்க்கையில் ஆசைகள் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவு பயமும் அதிகமாக இருக்கும். தான் சம்பாதித்த செல்வத்தை தன் பிள்ளைகள் எங்கே அழித்துவிடுவார்களோ என்ற பயத்திலும், தன்னிடமுள்ள பணத்தைப் பார்த்து மற்றவர்கள் கடன் கேட்பார்களோ என்ற பயத்திலும் வாழ்ந்து கொண்டிருப்பான். இந்தப் பயங்கள் எப்போது நீங்கும் என்றால், அந்த இறைவன் மெச்சும்படி நாம் வாழ வேண்டும். மக்கள் என்ன நினைத்தாலும் பரவாயில்லை, ஆனால் அந்த லோகேஸ்வரன் (உலகை ஆளும் இறைவன்) மெச்சும்படி வாழ வேண்டும் என்று நினைத்தால், உலக வாழ்க்கையின் கவலைகள் அனைத்தையும் விட்டு நிம்மதியாக வாழ முடியும்.

உலக வாழ்க்கையில் திருப்தியுடன் வாழ்ந்து கொண்டே, அந்த இறைவனைப் பற்றித் தெரிந்துகொண்டு, உங்களுக்குள் ஞானத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். நான் ஒரு சாதாரண ஜீவன் அல்ல; இந்த உடலை ஒரு ஆடையாகப் போர்த்திக்கொண்டு இப்பூமிக்கு வந்த இறைவனே நான். முற்பிறவியில் நான் செய்த புண்ணியத்தினால், இந்த பிறவியில் பரமாத்மா வடிவில்

ஒரு சத்குரு என் வாழ்க்கையில் வந்து இந்த உண்மையை எனக்குப் போதித்தார் என்று உணர்ந்து கொள்வீர்கள்.

இந்த பூமியில் ஒரு மனிதனால் மட்டுமே சாதனை (ஆன்மீகப் பயிற்சி) செய்து, தான் யார்? என்றும், இந்த சிருஷ்டி (படைப்பு) என்றால் என்ன? என்றும் தெரிந்துகொள்ள முடியும். சாதனை இல்லாத மனிதன் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் ஒரு ஜீவனைப் போலவே வாழ்ந்துகொண்டிருப்பான்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது உலகம் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியாது, உங்கள் அருகில் யார் இருக்கிறார்கள் என்று தெரியாது, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்றும் தெரியாது. இப்போது நீங்களும் அதே நிலையில்தான் இருக்கிறீர்கள். உங்களுக்கு 'மூன்றாவது கண்'(Third eye) இல்லை, உங்களால் மற்ற உலகங்களைக் காண முடியவில்லை. அதனால், அவை இல்லை என்று நினைப்பதே பெரிய அஞ்ஞானம் ஆகும்.

அதனால்தான் சத்குருமார்கள் வந்து, இந்த பூலோகம் நிலையானது என்று நினைக்கிறாய், உன் உடல் நிலையானது என்று நினைக்கிறாய், ஆனால் இதைவிட சிறந்த உலகங்கள் கோடிக்கணக்கில் உள்ளன. அவற்றை நீ இந்த உடலில் இருக்கும்போதே காண முடியும். அதற்கு தியானம் என்னும் பயிற்சி தேவை. தியானப் பயிற்சி செய்யும்போது உன் மூன்றாவது கண் விழிப்படையும். இந்த உடலில் இருக்கும்போதே உன்னால் எல்லா உலகங்களையும் காண முடியும்" என்று உங்களுக்குச் சொல்கிறார்கள்.

பல புத்தகங்களை மகாத்மாக்கள் எழுதி உங்கள் முன் வைத்துள்ளனர். அவை அனைத்தையும் சுவாத்தியாயம் செய்துகொண்டே, குரு சொன்ன

தியானத்தைச் செய்தால், குரு சொன்னது உண்மையான ஞானம் என்பது உங்களுக்குப் புரியும். அப்பொழுது உலக வாழ்க்கையில் நிம்மதி இருக்கும். உலக வாழ்க்கையில் ஏன் கவலைகள் இருக்கிறது? அனைத்தும் வேண்டும் என்று நினைப்பவனுக்குக் கவலை, இருப்பதை வைத்துத் திருப்தி அடைபவனுக்கு நிம்மதி இருக்கும்.

பணத்தின் மீதுள்ள மோகத்தை விட்டு தெய்வத்தின் மீது பக்தி வளர்த்துக் கொள்பவன் எப்போதும் நிம்மதியாக இருப்பான். உங்களுக்கு ஆன்மாவின் மீது எவ்வளவு அன்பு அதிகரிக்கிறதோ, உலக வாழ்க்கையில் அவ்வளவு திருப்தி இருக்கும். நீங்கள் விரும்பியது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ஒரு மனநிறைவு கிடைக்கும். எனக்கு இன்று எது தேவை, எது தேவையில்லை என்பது இறைவனுக்குத் தெரியும். அவர் கொடுக்கவில்லை என்றால் அது எனக்குத் தேவையில்லை என்ற திருப்தியுடன் உங்களால் வாழ முடியும். கவலையை விட்டு நிம்மதியாக வாழ வேண்டும் என்றால் ஞானத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரையும் தியானியாக மாற்றுவதே இந்த பூமியில் மற்ற அனைத்தையும் விடப் மிகச்சிறந்த புண்ணிய காரியமாகும்.

# அகக்குரல் சமிக்ஞைகள் யாருக்குக் கேட்கும்?

யாருக்கு அகக்குரல் அழைப்பு கேட்கும்? யாருக்கு அகத்திலிருந்து வரும் சமிக்ஞைகள் (Signals) கேட்கும்? என்பதைப் பற்றி தெரிந்துகொள்வோம். ஏனெனில், நீங்கள் அனைவரும் இந்தத் தியான மார்க்கத்திற்கு வந்திருக்கிறீர்கள், தியானம் செய்கிறீர்கள், ஞானத்தைப் பெறுகிறீர்கள், மிகச் சிறப்பாக வாழ்ந்து வருகிறீர்கள். ஆனால், இதே விஷயத்தை மற்றவர்களுக்குச் சொன்னால் அவர்கள் கேட்க மாட்டார்கள், ஏன் கேட்க மாட்டார்கள்? என்ற விஷயத்தைத் தெரிந்து கொள்வோம்.

நீங்கள் அனைவரும் குருவிடம் வந்து மிகுந்த ஞானத்தைக் கற்றுக்கொண்டு, உங்களுக்கு இருக்கும் சந்தேகங்கள் அனைத்தையும் நிவர்த்தி செய்து கொள்ளும் போது, உங்கள் மனம் பரிபூரண நிலையை அடையும்.

இந்த மார்க்கத்திற்கு வந்த நீங்கள், உடல் என்ற பிரமையை நீக்கி, நீங்கள் ஆன்மா என்பதைத் தெரிந்து கொண்டீர்கள். ஆனால், உங்கள் மனதின் தாக்கத்தின் காரணமாகச் சில நேரங்களில் சில விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியாமல் வருத்தப்பட்டுக் கொண்டிருப்பீர்கள்.

இந்த உலக வாழ்க்கையில் எத்தனையோ சுகங்களையும், இன்பங்களையும் அனுபவித்த பிறகும் ஆனந்தம் கிடைக்காமல், அவற்றின் மீது வெறுப்பு ஏற்பட்டு ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஆன்மீக மார்கத்திற்கு வருவார்கள். அப்படி வந்தவர்கள் ஆரம்பத்தில், நான் என் நண்பர்கள் மூலம் இந்த மார்க்கத்திற்கு வந்தேன், உடல்நலக் குறைவினால் வந்தேன், எனக்கு இருக்கும் கஷ்டங்களைத் தீர்த்துக் கொள்ள வந்தேன்" என்று

நினைப்பார்கள். ஆனால், உண்மையில் ஒவ்வொருவருக்கும் ஆன்மாவிலிருந்து ஒரு சமிஞ்கை கிடைக்கும், அப்படிப்பட்டவர்களே இந்த மார்க்கத்திற்கு வருவார்கள்.

என்னுடைய விஷயத்தையே எடுத்துக்கொண்டால், நான் என் வாழ்க்கையில் தியான மார்க்கத்திற்கு வரக்கூடாது, நான் தியானம் செய்யக்கூடாது என்று நினைத்தேன். ஆனால், எனக்கு ஒரு கஷ்டம் வந்தபோது ராகவராவ் அவர்கள், என் வார்த்தையை கேட்டு ஒருமுறை தியானம் செய்தால் நஷ்டம் என்ன? தியானம் செய்துதான் பாரேன் என்று சொன்னார். அப்போது நான் சரி ஒருமுறை தியானம் செய்துதான் பார்ப்போம்என்று நினைத்தேன் என்றால், அது ஆன்மாவிலிருந்து மனதிற்குத் தோன்றிய ஒரு சமிக்ஞை (அறிகுறி) தானே?

இந்த உலக வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டு, ஆன்மீகப் பாதைக்கு வர வேண்டும் என்று ஒரு சிலருக்கு மட்டுமே தோன்றும். எங்களுக்கு எவ்வளவோ செல்வம் இருக்கிறது, அழகான குழந்தைகள் இருக்கிறார்கள், ராகவராவ் அவர்களுக்கு எத்தனையோ பதவிகள் இருந்தன, இருந்தபோதிலும் அவருக்கு வாழ்க்கையில் திருப்தி ஏற்படவில்லை. இன்னும் ஏதோ தெரிந்துகொள்ள வேண்டும் என்று அவருக்குள் ஓர் உள்மனப் போராட்டம் இருந்தது. அவர் பூஜைகள் அதிகமாகச் செய்வார், கோவில் கூடக் கட்டினார், ஆனாலும் அவருக்குத் திருப்தி கிடைக்கவில்லை.

இன்னும் தெரிந்துகொள்ள வேண்டியது ஏதோ இருக்கிறது, அது தியானத்தின் மூலமே தெரிந்துகொள்ள முடியும் என்று எண்ணி எத்தனையோ குருமார்களிடம் சென்றார். ஒருமுறை மலையாள சுவாமிகளின் ஆசிரமத்திற்குச் சென்றபோது, அங்கே சுவாமிகளைப் பற்றிய ஒரு புத்தகத்தைப் படித்தார். "இந்த ஸ்வாமி

உயிருடன் இருந்தபோது நான் இவருக்கு சீடனாக இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?" என்று அவர் நினைத்தாராம். அந்த நேரத்தில் தான் அந்த பரமாத்மா, பத்ரிஜி அவர்களை எங்கள் வாழ்க்கைக்கு அனுப்பி வைத்தார்.

இந்த உலக வாழ்க்கையில் வாழ்பவர்களுக்கு அமைதி என்பது ஆன்மாவிற்குள் இருக்கிறது என்பது தெரியாது. எவ்வளவு செல்வங்கள் இருந்தாலும், எத்தனையோ சுகபோகங்கள் இருந்தாலும், அமைதி என்பது உலக வாழ்க்கையில் கிடைக்காது. எப்பொழுது நீங்கள் ஆன்மீக வாழ்க்கைக்கு வருகிறீர்களோ, உங்கள் வாழ்க்கையில் உண்மையை போதிக்கும் ஒரு சத்குரு வருகிறாரோ, அப்பொழுதுதான் உங்கள் வாழ்க்கையில் அமைதியைப் பெறுவீர்கள்.

இவ்வாறு உள் அறிகுறிகள் கொண்டவர்களுக்கு சத்தியத்தை போதிக்கும் புத்தகங்களே பிடிக்கும் தவிர, புண்ணியம் மற்றும் பாவம் பற்றி போதிக்கும் புத்தகங்கள் பிடிக்காது. இப்போது பாருங்கள், ஆன்ம முன்னேற்றத்திற்கும், ஆன்ம சக்தியை அதிகரித்துக் கொள்ளவும், ஞானத்தை வளர்த்துக் கொள்வதற்கும் உதவும் புத்தகங்களே உங்களுக்குப் பிடிக்கும்.

அப்படி உலக வாழ்க்கையின் மீது சலிப்பு ஏற்படும்போது, உங்களுக்குத் தெரியாத ஒரு வைராக்கியம் பிறக்கிறது. பலரைப் பாருங்கள், கோடிக்கணக்கில் சம்பாதித்துக் கொண்டே இருப்பார்கள் ஆனால் திருப்தி இருக்காது. பதவிகள் இருக்கும், ஆனாலும் திருப்தி இருக்காது. இவ்வாறு வெளி உலக வாழ்க்கையில் திருப்தி இல்லாதபோது வைராக்கியம் பிறக்கும். வாழ்க்கையில் தேவையானது இதுவல்ல, வேறு ஏதோ இருக்கிறது என்று எண்ணி புறப் பார்வையில்

(வெளிநோக்கு) இருந்து அகப் பார்வைக்கு (உள்நோக்கு) செல்கிறார்கள். இதுவே அந்தரங்க அழைப்பு. அந்த அழைப்பு ஆன்மாவில் இருந்து மனம் வழியாக உங்களுக்குக் கிடைக்கிறது. அதனால்தான் மனம் என்பது ஆன்மாவை அடைவதற்கான ஒரு துவாரமாக செயல்படுகிறது.

தமோகுணம் மற்றும் ரஜோகுணத்தில் இருப்பவர்கள் வெளி உலகத்தில் உள்ள சந்தோஷங்களைக் கண்டு பூரிப்படைந்து கொண்டிருப்பார்கள். அழியக்கூடிய சிறிய சிறிய சந்தோஷங்களான செல்வம், சந்ததி, சொத்துப்பத்துக்கள் ஆகியவற்றை பார்த்து அதுவே வாழ்க்கை என்று எண்ணித் திருப்தி அடைவார்கள். இத்தகையவர்களுக்கு அக அழைப்புத் தேவையில்லை, ஆன்மாவிடம் செல்ல வேண்டிய அவசியமும் இல்லை. "கண்களை மூடினால் என்ன நடக்கும்? இப்போது வேண்டாம், இன்னும் காலம் இருக்கிறது, முதுமை வரட்டும்" என்று அவர்கள் நினைப்பார்கள்.

ஆனால் யார் சாத்வீக குணத்திற்கு வருகிறார்களோ, உலக ரீதியாக எவ்வளவு செல்வங்கள் இருந்தாலும், எவ்வளவு சுகபோகங்கள் இருந்தாலும் அவர்களுக்கு வாழ்க்கையில் திருப்தி இருக்காது. அவர்கள் வெளிப் பார்வையைத் விட்டுவிட்டு, அகத்திற்குள் செல்ல வேண்டும் என்று தோன்றும். உலக ஈர்ப்புகளில் திருப்தி அடைபவனுக்கு ஒருபோதும் அகப்பார்வை கிடைக்காது.

பாருங்கள், சிலர் எத்தனையோ பூஜைகளைச் செய்து கொண்டே இருப்பார்கள். ஆனால் இறைவன் புறப் பிரியன்' அல்ல, அவர் அந்தர் பிரியன்(அகக்குரலை விரும்புபவர்) என்பது அவர்களுக்குத் தெரியாது. இந்த பிரபஞ்சம் அனைத்தும் அந்த இறைவனுடையதே என்று என்னும் போது, அவருடையதை அவருக்கே

அர்ப்பணிக்கிறோம் என்ற உண்மை தெரியாமல், இன்று நான் நன்றாகப் பூஜை செய்தேன், விதவிதமான மலர்களால் அலங்கரித்தேன், பல வகையான பிரசாதங்களைச் சமைத்துப் படைத்தேன் என்று திருப்தி அடைவார்கள்.

இன்னும் சிலர் தீர்த்த யாத்திரைகளுக்குச் செல்வார்கள். அங்கு இறைவனின் தரிசனம் நன்றாகக் கிடைத்தது என்றும், பரிந்துரைக் கடிதத்துடன் (recommendation letter) சென்று அபிஷேகங்கள், பூஜைகள் செய்தோம் என்றும், இறைவனை மிக அருகிலிருந்து பார்த்தோம் என்றும் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

இன்னும் சிலர் இமயமலைக்குச் செல்வார்கள். அங்கு நடக்க முடியாமல் டோலிகள் (பல்லக்கு போன்ற அமைப்பு) கட்டிக்கொண்டு, மற்றவர்கள் சுமந்து செல்ல மேலே ஏறி, அங்கிருக்கும் இறைவனைப் பார்த்து தரிசனம் நன்றாக நடந்தது என்று திருப்தி அடைவார்கள். இத்தகையவர்கள் அனைவரும் ரஜோ குணத்தில் இருப்பவர்களே, இவர்கள் புற ஈர்ப்புகளைக் கண்டு மகிழ்ச்சி அடைபவர்கள்.

யார் சாத்வீக குணத்திற்கு வருகிறார்களோ, அவர்கள் இந்தப் புற ஈர்ப்பை விட அகத்தின் (உள்ளத்தின்) ஈர்ப்பு இன்னும் மேலானது என்று உணர்ந்து கொள்வார்கள். அவர்கள் அனைவரும் அறியாமை என்னும் நிலையில் இருந்து ஞான நிலைக்கு வந்தவர்கள். இவர்களுக்கு அக அழைப்பு (உள்மனதின் குரல்) கேட்கும். புற ஈர்ப்புகளில் இருப்பவர்களுக்கு அக அழைப்பு கேட்காது. புறத்தை விட அகத்திற்குள் ஏதோ ஒன்று இருக்கிறது என்று உணர்பவர்களே, சாத்வீக குணத்திற்கு வந்தவர்கள் என்றே பொருள். சாத்வீக குணமே ஒருவரை சத்தியத்தை நோக்கி அழைத்துச் செல்லும்.

அதனால்தான், இந்த ஆன்மீக மார்கத்திற்கு வருமாறு எவ்வளவு சொன்னாலும் சிலர் வராததற்குக், காரணம் அவர்களுடைய குணங்களே. தமோ குணம் மற்றும் ரஜோ குணம் கொண்டிருப்பவர்களிடம் நீங்கள் எவ்வளவு சொன்னாலும் அவர்களால் சத்தியத்தை அறிய முடியாது. யார் சாத்வீக குணத்திற்கு வருகிறார்களோ, அவர்களால் மட்டுமே சத்தியத்தை உணர முடியும்.

அகப் பிரபஞ்சத்தில் (உள் உலகத்தில்) ஆனந்தமே இல்லை என்றால் யோகிகளும், ரிஷிகளும், முனிவர்களும் ஏன் எப்போதும் தியானத்திலேயே இருக்கிறார்கள்?

இந்த உலகத்தில் ஒரு கோடீஸ்வரரைப் பார்த்து, இவன் எப்படி இவ்வளவு பெரிய பணக்காரர் ஆனான்? என்று சிந்திப்பார்கள். ஆனால் ஒரு யோகியைப் பார்த்து, இவர் புற ஈர்ப்புகள் அனைத்தையும் துறந்து எப்படி அந்தர்முகமாக (உள்நோக்கிச் செல்பவராக) மாறினார்? என்று சிந்திக்க மாட்டார்கள்.

புற உலகத்தை விட அகத்திறகுள்ளேயே அதிக ஆனந்தம் இருக்கிறது என்பதை சாத்வீக குணத்தில் இருப்பவர்களால் மட்டுமே உணர முடியும். அத்தகையவர்களுக்கு அந்த இறைவன் கஷ்டங்களைக் கொடுத்து அவர்களைத் தன் பக்கம் ஈர்த்துக்கொள்கிறான், அதாவது அவர்களை ஆன்மாவை நோக்கித் திருப்பி விடுகிறான்.

இத்தகையவர்கள் அனைவரின் நலத்தையும் விரும்புவார்கள், யாருக்கும் தீங்கு செய்யமாட்டார்கள், சேவை மனப்பான்மையுடன் இருப்பார்கள். ஆனாலும் அவர்களுக்குள் ஏதோ ஒரு அதிருப்தி இருந்து கொண்டே இருக்கும். அதற்குக் காரணம் என்ன? என்று அவர்கள் உள்ளுக்குள் ஆழமாக சிந்திக்கும் போது, அந்தப்

பரமாத்மா அவர்களின் வாழ்க்கையில் ஒரு சத்குருவை அனுப்பி வைக்கிறார்.

அந்த இறைவனின் அருளால் மட்டுமே சத்துருக்கள் கிடைக்கிறார்கள். இந்த ஆன்மீக மார்கத்தில் முன்னேற வேண்டுமென்றால் இறைவனின் அருளும், குருவின் அருளும் இருக்க வேண்டும் என்று ஆதி சங்கராச்சாரியார் அவர்கள் கூறியுள்ளார்.

இவ்வாறு புறரீதியாக எவ்வளவு இருந்தாலும் திருப்தி அடையாத மனிதர்களுக்கு, ஏதாவது ஒரு சிறிய கஷ்டம் வரும்போது, "நான் இத்தனை காலம் இந்த குடும்ப வாழ்க்கையில் பல பொய்களைப் பேசினேன், பல கர்மாக்களைச் செய்தேன், பணம் சம்பாதிப்பதே குறிக்கோள் என்று நினைத்தேன், பதவிகளைப் பெறுவதே இலட்சியம் என்று எண்ணினேன், இவற்றிலேயே ஆனந்தத்தைத் தேடினேன், ஆனால் அது கிடைக்கவில்லையே" என்று எண்ணுவார்கள். ஆனால், ஆனந்தம் ஆன்மாவிலேயே இருக்கிறது என்று தெரிந்து கொள்ளும்போது மிகவும் திருப்தியாக வாழ்வார்கள். இந்தப் புற உலகிலேயே இவ்வளவு ஆனந்தம் இருந்தால், அகத்திற்குள் (உள்ளத்திற்குள்) சென்றால் இன்னும் எவ்வளவு ஆனந்தம் இருக்கும் என்று எண்ணி அந்தர்முகமாக (உள்நோக்கிச் செல்பவராக) மாறுவார்கள்.

அதனால்தான் இறைவன் மிகப்பெரியவர், அவர் அனைத்தையும் வெளியே வைத்துவிட்டு, தான் மட்டும் அந்தரங்கத்தில் (உள்ளுக்குள்) மறைந்து கொண்டுள்ளார். இந்த விஷயத்தைச் சிலரால் மட்டுமே உணர்ந்துகொள்ள முடியும். பகவத் கீதையில் கூட கிருஷ்ண பரமாத்மா, பல பேர் இறைவனைப் பற்றித் தெரிந்து கொள்வார்கள், ஆனால் எனது தத்துவத்தை மட்டும் மிகச் சிலரே உணர்ந்து என்னை அடைகிறார்கள் என்று கூறியுள்ளார்.

இந்த உலகம் முழுவதும் இறைவன் இருப்பதாக ஒத்துக்கொண்டாலும், அந்த இறைவன் எங்கே இருக்கிறார்? அவரை எப்படி அடைய வேண்டும்? என்ற பரம சத்தியம் ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும். இறைவனை நாடுபவர்கள் மட்டுமே எல்லையற்ற ஆனந்தத்தை அனுபவிப்பார்கள். இந்த சிருஷ்டியில் எதைப் பெற்றாலும் இறைவனை விரும்புபவன் மட்டுமே மகிழ்ச்சியாக வாழ்வான் என்று நமது சமூகத்தில் (Society) ராகவராவ் அவர்களின் சீடர்களுக்கு மட்டுமே தெரியும் என்று நான் மிகவும் பெருமையாகச் சொல்ல முடியும்.

ஏனென்றால், நமது சமூகத்தில் கூட பலர் சங்கல்பங்களைச் செய்யுங்கள், இந்தத் தியானத்தைச் செய்யுங்கள், அந்தத் தியானத்தைச் செய்யுங்கள் என்று பல விதமாக சொல்கிறார்கள். ஆனால் பத்ரிஜி அவர்கள், நீயே ஆன்மா என்று தெரிந்து கொள்வதற்கு மூச்சின் மீது கவனம் வைத்து தியானம் செய் என்று இரண்டே வார்த்தைகளில் சொல்லிவிட்டார். உங்களுக்குள் சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றால் சரியான தியானம் செய்ய வேண்டும், சரியான தியானத்தைச் செய்தால்தான் சரியான பலனை பெற முடியும்.

பத்ரிஜி அவர்கள் மூச்சின் மீது கவனம் வைத்து தியானம் செய்து உங்கள் உள்மனதிற்குள் செல்லுங்கள் என்று சொன்னால், அது புரியாமல் பல பேர் பலவிதமான தியானங்களைச் செய்து உள்மனதை மூடிக்கொள்கிறார்கள். அதனால் அவர்கள் உள்மனதின் குரலை கேட்க முடியாமல் போகிறது. ஏனென்றால் அத்தகைய தியானங்களினால் உள்மனதின் சமிக்ஞைகள் (Signals) மனதிற்கு எட்டாது. மனதை வெளி உலகத்தை

நோக்கியே வைத்திருந்தால் உள்மனதின் போதனைகள் கேட்காது.

சிலர் ஆரோக்கியத்திற்காகவே தியானம் செய்கிறோம் என்று கூறுவார்கள். உடல் நலத்திற்காக தியானம் என்பது எவ்வளவு விசித்திரமானது என்று தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் உடலில் உள்ள 'அன்னமய கோசத்திற்கு' சரியான உணவைக் கொடுக்கும்போது, எந்த கர்ம வினைகளும் உங்களுக்கு இல்லாதபோது, உங்களுக்கு நோயே வராது. உங்கள் உடல் நோயுற்றிருக்கிறது என்றால், ஏதோ தவறான உணவை உண்டீர்கள் அல்லது தவறான எண்ணத்தைக் கொண்டிருந்தீர்கள் என்பதை விசாரணையின் (Self-enquiry) மூலம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அழிந்து போகும் இந்த உடலுக்காக, தியானத்தின் மூலம் நீங்கள் பெறும் ஆன்ம சக்தியை செலவிடக்கூடாது என்று ஞானத்தின் மூலம் உணர்ந்து கொள்ள வேண்டும். தியானம் என்பது ஞானத்தைப் பெறுவதற்காக என்று ஒவ்வொருவரும் தெரிந்து கொண்டால் மகிழ்ச்சியாக வாழ முடியும். ஆனந்த சொரூபமான ஆன்மாவிடம்தான் உண்மையான ஆனந்தம் இருக்குமே தவிர, அந்த ஆனந்த ஸ்வரூபமான ஆன்மா படைத்த இந்த பிரபஞ்சத்தில் வெறும் சுக துக்கங்கள் மட்டுமே இருக்கும். ஆனால் அங்கு உண்மையான ஆனந்தம் இருக்காது.

இந்த உலகத்தில் கிடைக்கும் சுகதுக்கங்கள் நிலையற்றவை, அவை இன்று இருக்கலாம், நாளை இல்லாமல் போகலாம். ஆனால் ஆனந்தம் என்பது நிலையானது, நித்தியமானது என்று உணர்ந்து, இருப்பதைக் கொண்டு திருப்தியடைந்து, தியானம் செய்துகொண்டு ஆனந்தமாக வாழ வேண்டும். லௌகிக

சந்தோஷங்களை ஒரு துரும்பாகக் கருதி ஒதுக்கிவிட்டு, உண்மையான ஆனந்தத்தைத் தேடுபவனே 'மஹாயோகி'.

வெளி உலகத்தின் எல்லா சுகங்களையும் அனுபவித்தாலும், உள்மனதிற்குள் நிலையான சுகம் இருக்கிறது என்று உணர்ந்தவனே மிகவும் உயர்ந்தவன். அதனால்தான் சாத்வீக குணத்திற்கு வரும் வரை உள்மனதின் அழைப்பு கேட்காது. உள்மனதின் அழைப்பு சாத்வீக குணத்திற்கு வந்தவர்களுக்கு மட்டுமே கேட்கும். தமோ குணத்திலும், ரஜோ குணத்திலும் இருப்பவர்கள் அதிகமாக பாவச் செயல்களைச் செய்வதாலும், கர்ம வினைகளை அதிகமாகச் சேருவதாலும் அவர்களின் மனம் அசுத்தமாக இருக்கும், அதனால்தான் அவர்களுக்கு அந்த அகக்குரல் அழைப்பு கேட்காது.

பாவச் செயல்களைச் செய்வதை நிறுத்தி, புண்ணியக் காரியங்களை நற்செயல்களாக மாற்றிக்கொண்டு, உங்கள் கர்ம பலனைத் துறக்கும்போது, உங்கள் அகக்குரல் அழைப்பு உங்களுக்குக் கேட்கும். அதனால்தான் பாருங்கள், இந்த தியான மார்க்கத்திற்கு வந்தவர்கள், ஒரு வாரம் வீட்டில் ஏதோ வேலை இருக்கிறது என்று, ஒரு விசேஷமோ அல்லது திருமணமோ என்று தியானம் செய்யாமல் இருந்தால், உங்கள் மனதில் ஏதோ ஒரு குறை, ஏதோ தவறு செய்துவிட்டது போன்ற உணர்வு ஏற்படும். இன்று தியானம் செய்யவில்லை, சுவாத்தியாயமும் (நூல் வாசிப்பு) செய்யவில்லை, இந்த மாதம் நான் பீமாவரம் வகுப்புகளுக்குச் செல்லவில்லை என்று உள்மனதிற்குள் ஒரு வேதனையை உணர்வீர்கள்.

வெளி உலக சுகங்களின் மீது வெறுப்பு வந்து வைராக்கியம் ஏற்பட்டு, நீங்கள் சாத்வீக குணத்திற்கு வந்து திருப்தியாக வாழ்க்கையை வாழ்வீர்கள். உதாரணமாக, உங்கள் உணவில் அன்று செய்த கறி

(கூட்டு) உங்களுக்குப் பிடித்திருந்தால், இன்னும் ஒரு கரண்டி வாங்கிச் சாப்பிடுவீர்கள். அதற்காகப் பாத்திரத்தில் இருப்பதை எல்லாம் சாப்பிட்டால் உங்களுக்குத் திகட்டிவிடும். அதுபோலவே, வெளி உலக சுகங்களை எவ்வளவு அனுபவித்தாலும் உங்கள் மனதிற்குப் பரிபூரணமான திருப்தி கிடைக்காது.

நீ விரும்பும் அனைத்தும் உனது உள்மனதிற்குள்ளேயே உள்ளன என்று ஆன்மா மனதிற்குச் சமிக்ஞை (Signal) செய்கிறது. அதனால்தான் பாருங்கள், வெளி உலகைத்தை நோக்கித் திரும்பும் மனம் நமக்கு எதிரியாகிறது, அதுவே உள்நோக்கித் திரும்பிய மனம் நமக்கு நண்பனாகிறது. இரண்டிற்கும் காரணம் மனமே. ஆன்மாவிலிருந்து வரும் சமிக்ஞைகளை அலட்சியப்படுத்துவதும் மனமே, ஆன்மாவிலிருந்து வரும் சமிக்ஞைகளைச் செயல்படுத்தி உள்நோக்கித் திருப்புவதும் மனமே.

மனிதனுக்கு தமோ குணம், ரஜோ குணத்தில் கர்ம வினைகள் அதிகமாக இருப்பதன் காரணமாக, உள்மனதில் அழைப்பு கேட்காது. உலகக் கவர்ச்சிகள் மற்றும் புலன்களை இன்புறச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை இருப்பவர்களுக்கு உள்மனதின் அழைப்பு கேட்காது. எத்தனை தானங்கள் செய்தாலும் திருப்தியின்றி, எத்தனை புண்ணிய காரியங்கள் செய்தாலும் மனநிறைவின்றி, சுக போகங்களை அனுபவித்தாலும் அமைதியின்றி இருப்பவர்களுக்கு இன்னும் ஏதோ இருக்கிறது நான் செய்ய வேண்டியது, நான் தெரிந்து கொள்ள வேண்டியது மிச்சமுள்ளது என்ற எண்ணம் சாத்வீவ குணத்திற்கு வந்தவர்களுக்கு மட்டுமே தோன்றும்.

இந்த விஷயங்கள் அனைத்தையும் நான் ராகவராவ் அவர்களிடம் பார்த்திருக்கிறேன். எப்போதும் அவருடைய கவனம் மற்றவர்களுக்குச் சேவை செய்வதிலேயே இருக்கும். அவரிடம் இருந்த செல்வத்தை தானங்களுக்கும், புண்ணிய காரியங்களுக்கும் செலவு செய்து கொண்டிருப்பார். அப்படிச் செய்தும் கூட அவற்றில் முழு திருப்தி இல்லாமல், எனக்கு இன்னும் ஏதோ வேண்டும் என்று தவித்துக் கொண்டிருந்தார். அப்போது பத்ரிஜி அவர்களின் அறிமுகத்திற்குப் பிறகு, தான் விரும்பிய வாழ்க்கை தனக்குக் கிடைத்துவிட்டது என்று திருப்தி அடைந்தார். தனது 77 வயதிலும் கூட அவர் ஓய்வின்றி இயங்குகிறார் என்றால், தியானத்தின் மீதும், ஞானத்தின் மீதும், இறைவன் மீதும் அவருக்கு எவ்வளவு ஈடுபாடு என்பது அவருடைய அன்றாட வாழ்க்கையைப் பார்ப்பவர்களுக்குப் புரியும்.

நமது மனதிற்கு இருக்கும் குணங்களைப் பொறுத்தே நமது நடத்தை அமையும் என்று பல வகுப்புகளில் சொல்லியிருக்கிறோம். உங்கள் மனம் ரஜோ குணத்திற்குச் செல்லும் போது, முதற்படியாக புண்ணியக் காரியங்களை செய்யத் தொடங்குவீர்கள். இரண்டாவது படியாக நற்செயல்களைச் செய்யத் தொடங்குவீர்கள். மூன்றாவது படியாகத் தியானத்திற்குள் நுழைவீர்கள். அப்போது உங்கள் ஆன்மாவே உங்களை வழிநடத்திக் கொண்டிருக்கும். உங்கள் மனதையும் நல்ல பாதைக்கு வழி நடத்தும். நல்ல குணங்கள் கொண்ட மகாத்மாக்களுக்கு இறைவனிடமிருந்து அழைப்பு வரும். அது என்ன அழைப்பு என்றால், உள்நோக்கித் திரும்பும் என்ற ஓர் அழைப்பு கேட்கும், அப்போதுதான் அவர்கள் தங்களின் வெளி உலகப் பார்வையை விட்டுவிட்டு, அகப்

பார்வையாக (உள்நோக்கிய பார்வையாக) மாற்றிக் கொள்வார்கள்.

உங்கள் பார்வை புறப் பார்வையாக இருக்கும்போதுதான் அனைத்தும் கஷ்டமாகத் தோன்றும். ஆனால், உங்கள் புறப் பார்வை அகப் பார்வையாக மாறும்போது, எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் அவை கர்மா கழிகிறது என்ற திருப்தியுடன் அனைத்தையும் ஏற்றுக்கொள்வீர்கள். அப்போது உங்கள் வாழ்க்கையில் எது நடந்தாலும் அதை அப்படியே ஏற்றுக் கொள்வதை ஒரு பழக்கமாக்கிக் கொள்வீர்கள்.

ஏனென்றால், இறைவனுக்குத் தெரியாமல், அல்லது அவர் நிர்ணயிக்காமல் இந்த பூமியில் எதுவுமே நடக்காது. இன்று நமக்கு ஒரு கஷ்டம் வந்தது என்றால், அதற்கு ஏதோ ஒரு கர்மாவே காரணம். பாவ கர்மா இல்லாமல் கஷ்டம் வராது, புண்ணிய கர்மா இல்லாமல் இன்பம் வராது என்பதை தெரிந்து கொண்டு, எந்தக் கஷ்டம் வந்தாலும் துக்கப்படாமல் "கர்மா கழிந்தது" என்று திருப்தியுடன் வாழ்பவனே உண்மையான ஆன்மீகவாதி.

புற வாழ்க்கையின் மீதான விரக்தி வருவது தான் ஆன்மீக வாழ்க்கைக்கு அடித்தளம் என்றும், புற வாழ்க்கையில் ஆனந்தம் இல்லை என்றும், ஆனந்தம் என்பது உள்மனதிலேயே இருக்கிறது என்றும் தெரிந்து கொண்டு, புறத்தை விட்டுவிட்டு அகத்திற்குள் செல்ல வேண்டும். இந்த உண்மையை அறிந்தவர்கள் ஒரு நிமிடம் கூட வீணாக்காமல், நேரம் கிடைக்கும் போதெல்லாம் தியானம் செய்வார்கள்.

இந்த மார்க்கத்திற்கு வந்த நீங்கள் அனைவரும் திருப்திகரமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு, உங்களுக்கு எவ்வளவு கஷ்டம் வந்தாலும் இது என் கர்மாவின் பலன் என்று நீங்கள் தெரிந்து கொண்டதால்

தான் உங்களால் சாதனை (தியானப் பயிற்சி) செய்ய முடிகிறது. சாத்வீக குணத்தில் இருக்கும் நீங்கள் எப்போதும் சுயபரிசோதனை செய்து கொண்டு, மீண்டும் பின்னோக்கி தமோ குணத்திற்கோ அல்லது ரஜோ குணத்திற்கோ சென்று விடுகிறோமா, எனக்கு ஆசைகள் வருகிறதா என்று எப்போதும் சுயபரிசோதனை செய்து கொண்டு உங்கள் ஆன்மீக சாதனையில் முன்னேற்றம் அடைய வேண்டும்.

அதனால் தான் சாத்வீக குணத்திற்கு வந்த நீங்கள், தொடர்ந்து சாதனை செய்து கொண்டு உங்கள் குணங்கள் பின்னோக்கிச் செல்லாமல் பார்த்துக் கொண்டு, மனதைத் தூய்மையாக வைத்திருந்தால் அகக்குரல் அழைப்பு உங்களுக்குக் கேட்கும். உங்கள் மனதைத் தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் உங்களுக்கு இரண்டு முக்கியமான நன்மைகள் கிடைக்கும்:

1) புண்ணிய கர்மா மற்றும் பாவ கர்மாக்களை செய்ய மாட்டீர்கள்.
2) ஆத்மார்த்தமான பணிகளைச் செய்து, ஞானத்தை வளர்த்துக் கொண்டு மோட்சத்தை நோக்கிப் பயணிப்பீர்கள்.

அதனால்தான் ஒவ்வொரு நபரும் முதலில் தங்கள் மனதைச் சாத்வீக குணத்தில் வைத்திருக்க வேண்டும், மனம் தூய்மையாக இருக்க வேண்டும். "இன்று நான் ஏதேனும் தவறு செய்தேனா? யாரையாவது காயப்படுத்தினேனா? ஏதேனும் பொய் சொன்னேனா?" என்று தினமும் சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

உங்கள் எண்ணம், உங்கள் சொல், உங்கள் செயல் ஆகிய மூன்றையும் சரியாக வைத்திருக்க வேண்டும். அதாவது திரிகரண சுத்தியுடன் இருக்க வேண்டும். உங்கள்

சொல்லும், செயலும், எண்ணமும் ஒன்றாகும்போது உங்கள் மனம் அமைதியாக இருக்கும். அப்போது நீங்கள் ஆன்மாவிற்கு நெருக்கமாவீர்கள்.

தியானம் செய்வது என்பது ஆன்ம சக்தியை அதிகரிப்பதாகும். அதை வீண் எண்ணங்களால் வீணாக்காமல், தேவையற்ற சிந்தனைகளில் செலவழிக்காமல் சாதனை செய்து மோட்சத்தை அடைய வேண்டும்.

எனவே, நீங்கள் அனைவரும் தியானப் பயிற்சி செய்து, உங்கள் புறப் பார்வையை அகப்பார்வையாக மாற்றிக்கொண்டு, உள்மனதின் அழைப்பைக் கேட்கும் சக்தியைத் தியானத்தின் மூலம் பெறுங்கள்.

# Information available on Tatavarthy's website:

***Website address: www.tst.org.in***

a) Details of programs conducted under the guidance of Mr. and Mrs. Tatavarthy and Google Maps location are available.

b) All books by Mr. and Mrs. Tatavarthy are available in PDF format for free download in Telugu, Kannada, Hindi, and English languages.

c) All the messages of Mr. and Mrs. Tatvarthy are organized in concept-wise YouTube playlists.

d) Summaries of Mr. and Mrs. Tatavarthy's messages are provided in the form of quotations.

e) The gallery of Mr. and Mrs. Tatavarthy is also available.

For registration of a 3 day free meditation and soul-knowledge training classes held in Bhimavaram on the 1st, 2nd, and 3rd of every month, contact Sindhura, 8555995217.

# How to meditate?
# Observation of the breath

Sit in a comfortable position, with your hands clasped (locked) and legs crossed, and close your eyes. Simply focus on your natural breathing, noticing each inhale and exhale.

Even if numerous thoughts arise while focusing on your breath, let go of them and refocus on the breath. Gradually, you will reach a state of thoughtlessness, where the flow of thoughts ceases (stops), and the mind becomes empty and calm. This is the true meditative state.

Once we reach a state of thoughtlessness, we must observe various experiences related to the body, the subtle energy body (nadi mandala sharira), and soul. In this state, the cosmic energy abundantly flows into the body, cleansing the subtle energy body. This energy heals all ailments (illnesses), and as the subtle energy body is purified, our karmas will dissolve.

Everyone should meditate twice daily for at least the same number of minutes as their age.

# श्री तटवर्ती वीर राघवराव के हिन्दी किताब

| | | |
|---|---|---|
| 1. | आत्म शास्त्र । | Rs.200/- |
| 2. | ध्यान विद्या । | Rs.160/- |
| 3. | भगवद् गीता का सार । | Rs.160/- |
| 4. | सत्य मार्ग । | Rs.160/- |
| 5. | मरने से पहले मरना है। | Rs.130/- |
| 6. | गाईडिंग ध्यान क्यों नहीं ? | Rs.120/- |
| 7. | भगवान कौन है। | Rs.120/- |
| 8. | कर्म सिद्धांत । | Rs.120/- |
| 9. | विज्ञान का अर्थ - निहितार्थ । | Rs.120/- |
| 10. | ब्रह्म ज्ञान । | Rs.100/- |
| 11. | यह जीवन क्यों है ? | Rs.100/- |
| 12. | मेहर बाबा का संदेश । | Rs.100/- |
| 13. | कौन सा ध्यान सही है ? | Rs.100/- |
| 14. | इच्छाओं के कारण होने वाली हानियाँ | Rs.100/- |
| 15. | शंकराचार्य जी का ज्ञान संदेश | Rs.100/- |
| 16. | कठोपनिषद् | Rs.100/- |
| 17. | उपमान ज्ञान संदेश | Rs.100/- |
| 18. | शिरडी साई के संदेशों | Rs.100/- |
| 19. | मरने के बाद, साथ में आने वाले विषयों । | Rs.80/- |
| 20. | भगवत के दृश्यों का अर्थ । | Rs.80/- |
| 21. | आत्म हंतक कौन होता है । | Rs.70/- |
| 22. | स्त्री जन्मों में सीखने वाले विषयों, पुरुष जन्मों में सीखने वाले विषयों। | Rs.70/- |
| 23. | दुख निवारण का मार्ग | Rs.75/- |
| 24. | उत्तम पुरूष | Rs.60/- |
| 25. | आर्थिक स्थिति बढाना है तो ? | Rs.60/- |
| 26. | निर्वाण मार्ग | Rs.60/- |
| 27. | विदुर के संदेशों | Rs.50/- |
| 28. | सत्य | Rs.50/- |
| 29. | क्या हम इस लोक के वासी हैं या परलोक के वासी हैं ? | Rs.50/- |
| 30. | गुरू को पहचानना कैसे ? | Rs.50/- |
| 31. | विद्यार्थियों के विकास के लिए ध्यान विद्या | Rs.50/- |
| 32. | शाकाहार ही मानव का आहार है! | Rs.50/- |
| 33. | ब्रह्मं क्या है ? | Rs.50/- |
| 34. | शंकराचार्य जी का जाग्रत पंचक | Rs.50/- |
| 35. | शंकराचार्य जी का निर्वाण शट्कम | Rs.50/- |
| 36. | चैंपियन बनना हो तो ? | Rs.50/- |
| 37. | तीन प्रकार के जीवन | Rs.50/- |
| 38. | संकल्प अर्थात ? | Rs.40/- |



# ब्रह्मविध्वरिष्ठ तटवर्ति राज्यलक्ष्मी के हिन्दी किताब

1) एक और जन्म ........................................Rs.160/-
2) साधना में स्थितियाँ.................................. Rs.80/-
3) ज्ञान माला ............................................ Rs.70/-
4) श्री दत्तात्रेय जी का 24 गुरूओं ।................ Rs.70/-
5) अगर मानव को योगी बनना है तो ?........... Rs.60/-
6) गुरु पूर्णिमा का विशिष्टता ......................... Rs.60/-
7) महात्माओं का संदेशों ............................... Rs.50/-
8) मानव के कर्तव्यों ................................... Rs.50/-
9) गुरु पूर्णिमा का विशिष्टता ......................... Rs.50/-
10)शाकाहार ही मानव का आहार है !.............. Rs.50/-

## To subscribe to Tatavarthy's YouTube channel:

When you click the YouTube link sent in the WhatsApp group, it will open the Tatavarthy Veera Raghava Rao channel. Once open, you will see the "Subscribe" button-click on it to subscribe. By clicking the bell icon next to it, you can receive notifications of new videos everyday.

Otherwise, visit www.tst.org.in/videos/ Click on "Tatavarthy Veera Raghava Rao" in Section I, or on the names in sections II & III. This will open the respective channels. Once open, click the "Subscribe" button, and by pressing the bell icon next to it, you can get daily video updates.

# Tatavarthy Raghavarao Sir Books in English

| | | |
|---|---|---|
| 1. | Life Science (Part-I) | Rs.120 |
| 2. | Why is Guiding Not Meditation ? | Rs.100 |
| 3. | Which is the right meditation ? | Rs.100 |
| 4. | Die before death! | Rs.120 |
| 5. | The Law of Karma | Rs.100 |
| 6. | Losses caused by Desires | Rs.100 |
| 7. | Benefits of knowing what happens after death | Rs.100 |
| 8. | What is Meditation? | Rs.80 |
| 9. | True Path | Rs.80 |
| 10. | Why soul-knowledge ? | Rs.70 |
| 11. | What comes after death ? | Rs.70 |
| 12. | Learnings through the male and female births | Rs.70 |
| 13. | Who are Soul-murderes? | Rs.70 |
| 14. | How to improve Financial Status ? | Rs.60 |
| 15. | Wisdom is attained only through Meditation | Rs.60 |
| 16. | Brahma Jnan | Rs.60 |
| 17. | What is Intention? | Rs.50 |
| 18. | Why is this life? | Rs.50 |
| 19. | Shankaracharya's Jagrata panchakam | Rs.50 |
| 20. | Vegetarian Food Is Human Food | Rs.50 |
| 21. | Brahman means? | Rs.50 |
| 22. | How to become a master? | Rs.50 |
| 23. | How to become a champion ? | Rs.50 |
| 24. | Truth | Rs.50 |
| 25. | Three types of lives | Rs.50 |
| 26. | Are we residents of this world or the other world? | Rs.40 |
| 27. | Meditation for the Development of Students | Rs.40 |
| 28. | Non violence and vegetarianism | Rs.40 |

| | |
|---|---|
| REBIRTH (Tatavarthy Rajya Lakshmi) | Rs.150 |
| What is Ignorance (Avidya) ? | Rs.70 |



மனிதனின் முன்னேற்றம் மனதைப் பொறுத்தே அமைகிறது. மனம் வெளி உலக வாழ்க்கையை நோக்கித் திரும்பினால், முன்னேற்றம் மந்தமாக இருக்கும். அதே மனம் ஆன்மாவை நோக்கித் திரும்பினால், முன்னேற்றம் மிக அதிகமாக இருக்கும்.

மனித மனம் 'பஞ்சாவஸ்தைகள்' (ஐந்து நிலைகள்) கொண்டது. அவை: 1) ஸ்மிருதி (நினைவு), 2) மதி (எண்ணம்), 3)புத்தி(பகுத்தறிவு), 4)பிரக்ஞை (விழிப்புணர்வு), 5)பிரதிபா(தனித்திறமை)

நம் மனம் இந்த ஐந்து நிலைகளில் இருக்கும்போது, முதலில் நமக்காகவே நாம் வாழ்வதாகத் தோன்றும். ஆனால், இறுதியில் இந்த உடல் மற்றவர்களுக்காகவே எடுக்கப்பட்டது என்பது புரியும். அவ்வாறு புரிந்துகொள்ளும் போதுதான், மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கான வாய்ப்பு உண்டாகும்.

உங்கள் மனம் ஆழமான உள்மனதிற்குள் செல்லும்போது, அது விரிவடைகிறது. அதாவது அனைவருக்கும் உதவ வேண்டும், அனைவரையும் ஞானிகளாக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட மனமே மிகச் சிறந்த மனம். அத்தகைய மனப்பக்குவத்தை வளர்த்துக் கொண்டு, அனைவரும் நலமுடன் வாழ வேண்டும் என்ற ஆசை ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்.

Rs.60/-

-பிரம்மவித்யரிஷ்ட தட்டவர்த்தி ராஜ்யலட்சுமி

**Scan these QR codes using Google Lens to download the books of Mr. Tatavarthy Veera Raghava Rao & Mrs.Rajyalakshmi from the website.**

| Telugu Books | English Books | Hindi Books | Kannada Books | Tamil Books |
|---|---|---|---|---|